
# ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயஹூ ஆனிமீ 10—7—54 [இதழ் 8

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலயம்
அடையாறு, சென்னை-20.

தருமபுர ஆதீனத்தில்



சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு
ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருளாசி வழங்குதல்

ஆசிரியர்: வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்.
துணை ஆசிரியர்: புத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.
தருமபுர ஆதீ

தருமபுர ஆதீன வெளியீடு.

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.


டிம்மி 1×8சைஸ். பக்கங்கள் 768.

**விலை விபரம்:**


| | |
|---|---|
| **ராப்பர் பைண்டு:** | ...ரூ. 3—8—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ரூ. 1—5—0 |
| **காலிகோ பைண்டு:** | ...ரூ. 5—0—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | ரூ. 1—8—0 |

கிடைக்குமிடம்:—

தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையம்,
41, ஊஸ்மான் ரோடு,
தியகராயநகர், சென்னை.



ஆதீனக் கல்லூரியில்
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்



சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்குத்
தைலம் வழங்குவது



செல்லைச் சிவனடியார் திருக்கூட்டம் அமுதுண்ணுதல்
(காட்சி 1.)



சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் அமுதுண்ணுதல்
(காட்சி 2 )

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயவூ ஆனிமீ 10—7—54. [இதழ் 8

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## முன்னுணர்வு

தேசு செறிகமலைச் செங்கமலப் பொற்பாதன்
பேசுதமிழ் ஞானப் பிரகாசன் — பாசவினை
வாட்டினுன் மீட்டுநான் வாரா வகையருளைக்
காட்டினுன் கூட்டினுன் காண். —சிவபோகசாரம்.

பின்விளைவதை முன் உணர்வது எளிதோ? அரிதோ? எளிதாயின், தெய்வஞானம் பெற்றுச் சிறந்த தீர்க்கதரிசி என்று பலர் சொல்லச் சிலர் விளங்குவதேன்? அரிதாதலால் தான்சிலரே அப்புகழ்பெற்று விளங்குகின்றனர், விளங்கினர். கனம், ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் பேரறிஞர்கள் தீர்க்கதரிசியாகப் போற்றிவரும் உண்மையை நோக்கின், அப்புகழ்பெறுதலின் அருமை நன்கு புலப்படும். முன்னுணர்வு (தீர்க்கதரிசனம்) தோன்றியபோது, அது, பின் நிச்சயமாய்ச் சித்திக்கும் என்று கருதப்படாமல், சித்தித்த பிறகு, நினைவிற்குவந்து, களிப்பூட்டுவது பலர் அநுபவத்தில்

545



இருக்கலாம். அம்முன்னுணர்வு தோன்றிய அக்காலத்தி லேயே அதைப் பலர் அறியச்செய்து, அவ்வுணர்ச்சியின் பயன், பின் விளையும்போது, யாவரும் பெரிதும் பாராட்ட வாய்த்தால், அதுதான் மிக்க சிறப்பை உடையதாகும். ஆகவே, அத்தகைய முன்னுணர்வு ஒன்றுக்கும் பற்ருத எனக்கும் பலமுறை உதித்தல் உண்டு. அவை அப்படியே தவருமல் நிறைவேறுதலும் உண்டு.

'**ஞானசம்பந்தம்**' என்னும் இத்திங்களிதழில், பல யாண்டுகளுக்கு முன் '**தலைமறைவு**' என்றதொரு தலைப் புடைய கட்டுரை வெளியிடப்பட்டிருக்கின்றது. அது திருமுறைகளுட் காணப்படும் சில அருட்பாடலைக்கொண்டு என்னுல் எழுதப்பட்டதாகும். அதில், இத் தருமையாதீனத் தின் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவடி நிழலில் அடியேனது தலை மறைந்திருப்பதாக எழுதியுள்ளேன். அதற்குக் காரணம், யாதோ அறியேன். உள்ளுணர்வு எழுதுவித்தது, எழுதினேன். எழுதினுலும், அன்றே, தருமையிற் சென்று அப்பெருமான் திருவடிநிழலில் மறைந்திருக்கும் (சிவஞானப்)பயன் அடியே னுக்கு வாய்ப்பது நிச்சயம் என்று துணிவுற்றேன்.

அது 10—9—52இல் நிறைவேறிற்று. தலைமறைவு தலைமறைவாகமட்டும் இராமல் உடல்முழுதும் அத்திருவடி யில் மறைந்ததாக இருக்கவேண்டும் என்று அவாவியிருந் தேன். அவாவைப் போலக் கெட்டது ஒன்று உண்டோ? அத் தலைமறைவும் இல்லாதபடி, இத்தமிழ்நாடுமுழுதும்-ஏன்? இலங்கையிலும் காசியில் கேதாரகட்டத்திலுங்கூட வெளிப்படுத்திவிட்டது. அதுபோன்ற அற்புதங்கள் எல்லாம் திருவருட்கே உரியவை. முதலில், கல்லூரியிற் பேராசிரிய ஞக்கிற்று. அடுத்து, சோழ, பாண்டிய, சேரநாட்டிலும் என்னைப்பலர் அறியும்படி சொற்பொழிவாளனுகச்செலுத்து கின்றது. திருமுறைக்கும் குறிப்புரை எழுதும் பெரிய வாய்ப்பை அருள்கின்றது. வேறு பற்பல நலங்களைச் செய்து

வருகின்றது. இந்த 'ஞானசம்பந்தம்' இதுவரையில், கட்டுரையாளன் என்னும் முறையில் என் சம்பந்தம் உடையதாயிருந்ததும் அத்திருவடியாம் திருவருளேயாகும். 'பாலஇந்தியா' 'மணிவாசகம்' என்பவற்றை நடத்திய தாலோ எதனாலோ இத்திங்களிதழின், **துணையாசிரியன்** என்னும் சம்பந்தத்தையும் இப்போது அடியேனுக்கு அத்திருவடியே உண்டாக்கியிருக்கின்றது.

தருமையாதீனம் ஸ்ரீ சோமசுந்தரப் பெருமானது. தருமைக் குருமூர்த்தியும், அச்சொக்கலிங்கமும் வேறல்ல. அவ்வுண்மையைச் சைவசித்தாந்திகளே உணர்வார்கள். என்னை ஆதீனப்புலவனாக்கியதும், கல்லூரியாசிரியனாக்கிய தும், என்னை ஞானசம்பந்தத்தின் துணையாக்கித் துணைபுரிவ தும், என் தலைமறைவை உலகம் அறிய வெளிப்படச் செய்வ தும் அச் சோமசுந்தரமூர்த்தியின் திருவருளேயாதலின், அம் முன்னுணர்வு இவ்வுயர்வை அளித்துக் காத்துவருகின்றது.

வாழ்க சொக்கலிங்கமூர்த்தியின் திருவடி.

வளர்க ஞானசம்பந்தம்.

---

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவ ஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 8—7—54 அன்று திருப்புகலூர் ஸ்ரீ அக்கினீசுவரசுவாமி, திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் ஸ்ரீ வர்த்தமானீச்சரசுவாமி ஆலயங்களில் அபிஷேக ஆரா தனைகள் செய்வித்து, தலப்பதிக வெளியீடும் வழங்கப் பெற்றது.

550.

# ஒரு தேவாரப் பாடல் உரை

**இஃது இலக்கணம், ஸ்ரீமத் முத்துக்குமரசாமித் தம்பிரான் சுவாமிகள் எழுதிவைத்திருந்தது.**

இதிலுள்ள அருட்செல்வத்தை எவராலும் அளவிடலியலாது. பாடலோ திருஞான சம்பந்தப் பெருமானருளியது. உரையோ சைவமடாலயத்தின் அருட்சிறப்பை இந்நூற்ருண்டில் காட்டிவந்தவரும் அடியேனை ஆட்கொண்டவருமாகிய தவமுனிவர் அருளியது.

பாசமானகளைவார் பரிவார்க் கமுதமனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போன் மிடற்ருர் கடவூர் மயான மமர்ந்தார்
பேசவருவார் ஒருவர் அவரெம் பெருமான் அடிகளே. (7)

இதன் பொருள் : திருக்கடவூரின்கணுள்ள திருமயானத்தைத் திருக்கோயிலாக விரும்பி எழுந்தருளியிருப்பவர், அன்புசெய்பவர்க்குப் பாசமானவற்றைக் களைந்தருள்வார், அமுதம் போல்வார், விருப்பு வெறுப்புக்கள் நீங்குமாறு தமது திருநீறு முதலிய சாதனங்களைத் தருவார் அசைகின்ற ஏற்றின் மீது எழுந்தருளிவருவார், காசாம்பூவினையொத்த திருமிடற்றினையுடையார், தமது புகழ்ப்பண்புகளைப்பேசின் அங்கு வெளிப்பட்டருளுவார், இங்ஙனமாய பல தன்மைகளையுடையராயினும் அவர் ஒருவரே. அவரே எங்களுக்குப் பெருமானுகிய அடிகளாவார் என்பதாம்

திருக்கடவூர்த் திருமயானத்தைக் கோயிலாக விரும்பியெழுந்தருளிய பெருமான் இறைமைக் குணங்கள் முழுவதுமுடையவர். அவரே எங்களுக்குப் பெருமானுவாரென்பது இப்பாசுரத்தின் திரண்டபொருளாம்.

பாசமான எனப்பன்மையாற்கூறவே, மலம் கன்மம் மாயை திரோதானம் மாயேயம் என்னும் ஐந்து மலங்களும் கொள்ளப்படும். "மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற் பொருமத்துறவே" என்பது திருவாசகம்.

மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன் இன்னும்.

மாயையின் காரி யத்தை மாயேய மலமதென்றும்
ஏயுமும் மலங்கள் தத்தந் தொழிலினை யியற்ற வேவுந்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
ஆய்வரிம் மலங்க ளைந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்.

என்னும் சிவஞான சித்தியாரால், அறியப்படும்.

பரிவார் - முறுகிய அன்புடையார். "உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ யொளித்திருந்தால், எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாம் காண்கின்றாய்" என்பது கண்ணப்பர் புராணம்.

அமுதம் அனையார், மிர்தம் - அழிவு. அமிர்தம் - அழிவில்லது. அமிர்தமென்னும் வடசொற்றொடர்மொழி அன்மொழித் தொகையாய் அழிவின்மையைச் செய்வது என்னும் பொருட்டாய் அமுதம் எனச் சிதைந்து நின்றது 'சிதைந்தனவரினும் இயைந்தன வரையார்' என்பது தொல். 'காப்பியம்.

நரை திரை மூப்புச் சாக்காடென்பவற்றை நீக்குதலின் தேவருண்டியை அமுதமென உபசாரமாக வழங்குவர். கடவூர்ப்பெருமான் பரிவார்க்குப் பிறப்பிறப்புக்களை மீள வாரா வகைநீக்கியருள்பவர் என்பதை உவமை வாயிலாக உணர்த்தற்கு ஒருபுடை ஒப்புமைபற்றி அமுதம் அனையார் என்று உபதேசித்தருளினார்.

ஆசை எனவே இனம்பற்றி வெறுப்புங் கொள்ளப்படும். விருப்பு வெறுப்புக்கள் ஆகாமிய வினைவாய்ப் பிறவிக்கு வித்தாகலின் அவைதீர்தற்குத் திருநீறும் கண்டிகையும் திருவைந்தெழுத்தும் சாதனமாம். அவற்றை இறைவனே தந்தருள்வன் என்பது உண்மைநூற்றுணிபு. ஆதலின் கொடுப்பார் என்பதற்குச் செயப்படுபொருள் திருநீறு முதலிய சாதனங்களை என வருவித்து உரைத்துக்கொள்க. "பெருந்தவத்

தோர்களுக்கெல்லாம் ஆசைகெடுப்பது நீறு' (தேவாரம்.) "தன்னுணர வேண்டித் தனதுருவைத்தான் கொடுத்து" (சிவஞானபோதம்) எனவும் வருவனகாண்க.

அலங்கல் - அசைந்து நடத்தல். "வேண்டுநடை நடக்கும் வெள்ளேறேறி" என்பது தேவாரம். அறக்கடவுளே ஏருதவின், வருணங்கள்தோறும் நிலைதோறும் ஆற்றல் வகைமைக் கியன்ற வினைகளாம் அவ்வறம் நடைபெறும் என்பது கருத்து.

"காசை மலர்போன்மிடறு" அளவிலாற்றலுடைமையை விளக்கிநிற்பது அது. "கனைத்தெழுந்த வெண்டிரை சூழ் கடலிடை நஞ்சுதன்னைத், தினைத்தனையாமிடற்றில் வைத்த திருந்திய தேவ" எனவும்,

"பருவரையொன்று சுற்றியரவங்கைவிட்ட விமையோரறிந்து பயமாய்த் - திருநெடுமால் நிறத்தையடுவான் விசும்பு சுடுவானெழுந்து விசைபோய்ப் - பெருகிட மற்றிதற்கோர் பிதிகாரமொன்றையருளாய்பிரானே யெனலும் - அருள் கொடுமாவிடத்தை யெரியாமலுண்ட அவனண்டர் அண்டர் அரசரே. 'பாரோடும் விண்ணோர்கள்" (திருக்குற்றாலப் புராணம்) என்பவற்றால் அளவிலாற்றலும் பொருளுடைமையும் விளங்கும்.

பேசுதற்குச் செயப்படுபொருள் புகழ்ப்பண்புகள் "இருள் சேர் இருவினையுஞ் சேராவிறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" எனவும், "அவன் பூங்கழல் யாம் பேசத் திருவார்த்தையின் பெருநீளம் பெருங்கண்களே". (திருக்கோவையார்) என்று வருவதைக்காண்க.

மிக்க விசித்திரமாய பிரபஞ்சத்தைப் படைத்தற்கு வினை முதல் பலர் வேண்டுமென்பாரும் உளராகலின், பேராற்றலும் பேரறிவும் உடைய முதல்வன் ஒருவனே அமையும் என்பார் "மண்ணும் விண்ணும்படைத்த தேவன் ஒருவன்" என மறைமுடிவு கூறும்பொருளை அநுவதித்து ஒருவர் என்றருளினர், "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்ற திருவாசகமும் இங்குக் கருதற்பாலது.

# அபராதக்ஷமாபணம்

## (குற்றம்பொறுக்கவேண்டுதல்)

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், M. A., B. L.,
[தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.]

**ஈச்வரனை ஸகுணனாகவாவது நிர்குணனாக வாவது த்யானம் செய்வது உத்தமம். த்யானத்திற்கு இந்த்ரிய நிக்ரகமும் சித்தசுத்தியும் இன்றியமையாதவை. த்யானம் செய்ய இயலாதவர்களுக்குப் பூஜைசெய்வது ஸாத்யமாகலாம். அதிலும் குறைகள் ஏற்படுமாதலால் அபராதக்ஷமாபணப் பிரார்த்தனை முக்கியத்துவமடைகின்றது.**

"நாமும் ஈச்வரனும்": அப்படியா? அல்லது, "நாமும் நம் பெண்டிரும் மக்களும்", "நாமும் நம் சுற்றத்தாரும்", "நாமும் நம் பணமும் ஆட்படைகளும்" "நாமும் நம் அலுவலும்"; "நாமும் நம் தொல்லைகளும், புகழ்களும்" இப்படியா? சிந்திக்கவேண்டியதை மறந்து உதவாக்கரைகளைப்பற்றியல்லவா நாம் அல்லும் பகலும் சிந்தித்துக்கொண்டு வாழ்நாட்களை வீணாக்கிக்கொள்கிறோம். அநித்யங்களைப் பெரிதாக எண்ணி நித்யத்தின் பெருமையை அறிய முயற்சிசெய்யாமலிருக்கிறோம். "நாம் யார்? அவர் யார்?" - இந்த விமர்சனையில் ஆர்வம் நம்மை எப்பொழுது ஆட்கொள்கிறதோ அப்போதே நாம் மனுஷ்யஜன்மாவுக்கு உரிய உயரிய உண்மையான பிரவிர்த்தியில் ஈடுபட்டவர்களாவோம்.

"அவரை"ப்பற்றி, சாஸ்திரங்கள் என்ன கூறுகின்றன?

**यद्भयाद्वाति वायुश्च सूर्यो भ्रमति चाम्बरे ।**
**यस्य निःश्वसितं वेदाः ऋग्वेदाद्याः प्रमाणतः ॥**

எவருடைய கட்டளையால் காற்று வீசுகிறதோ, ஆகாயத்தில் சூரியன் சுற்றிவருகிறானோ, ருக் முதலிய வேதங்கள் எவருடைய மூச்சுவிடுதலோ,

554

यं तु ब्रह्मादयो देवाः स्तुन्वन्ति विविधैः स्तवैः ।
ध्यायन्ति हृदये नित्यं पूजयन्ति महर्षयः ॥

எவரைப் பலவிதமான ஸ்தோத்திரங்களால் பிரும்மாதி தேவர்கள் துதிக்கின்றனரோ? மஹர்ஷிகள் ஹ்ருதயத்தில் த்யானம் செய்கின்றனரோ, பூஜிக்கின்றனரோ,

यच्चरित्राणि पुण्यानि भक्त्या च विविधानि च ।
अचिन्त्यानि विचित्राणि गायन्ति सनकादयः ॥

எவருடைய எண்ணிறந்த, அறிவுக்கு எட்டாத, அற்புதமான புண்ணிய சரித்திரங்களைப் பக்தியுடன் ஸநகாதி தேவரிஷிகள் கானம் செய்கின்றனரோ,

यस्य स्मरणमात्रेण महापातकिनोऽपि च ।
जन्तवश्च विमुच्यन्ते जनिमृत्युभवाद्भयात् ॥

எவரை நினைத்தமாத்திரத்தில் பாபிகளும் ஜனன மரண பயத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்களோ,

यस्य विज्ञानमात्रेण ज्ञायते सकलं जगत् ।
यदज्ञानात् प्रपञ्चोऽयं दृश्यते सत्यवत् सदा ॥

எவரை அறிந்தமட்டில் இப்பிரபஞ்சத்தின் தத்துவம் அறியப்படுமோ, எவரை அறியாதவரையில் இப்பிரபஞ்சம் ஸத்யம் போல் காணப்படுகிறதோ,

अस्ति भाति प्रियं रूपं नाम चेत्यंशपञ्चकम् ।
आद्यत्रयं तु यद्रूपं मायारूपं ततो द्वयम् ॥

இருக்கிறது, அறியப்படுகிறது, இன்பமானது உருவமுடையது, பெயருடையது என்ற ஐந்து அம்சங்களில் மாயாரூபமான இறுதி அம்சங்கள் இரண்டையும் விலக்கி முதல் மூன்றும் எவருடைய ஸ்வரூபமோ,

सर्पादौ रज्जुसत्तेव वत्सत्ता भासते सदा ।
प्रपञ्चाधाररूपेण वर्ततेऽतो जगन्नहि ॥

பாம்பு என்ற பொய்யறிவிற்குப் பழுதையின் உண்மையான இருக்கை ஆதாரமாவதுபோல் இந்தப் பொய்ப்பிரபஞ்சத்திற்கு எவர் உண்மையான ஆதாரமானவரோ,

यस्यान्तःस्थानि भूतानि येन सर्वमिदं ततम् ।
सर्वज्ञोऽनन्तशक्तिश्च विश्वरूपी सुखात्मकः ॥

எவரிடம் எல்லா ஜீவன்களும் அடக்கமோ எவர் எல்லாவற்றிலும் தொடர்ந்து நிற்பவரோ எவர் ஸர்வமுமறிந்தவரோ, அனந்தசக்தி ஸம்பன்னரோ, விச்வரூபியோ, இன்பமயமானவரோ,

सत्यो भूतहितोऽनन्तो देवदेवो महेश्वरः ।
भोक्ता च यज्ञतपसां पवित्रो मङ्गलं परम् ॥

எவர் உண்மையாக இருக்கையை உடையவரோ, ஜீவராசிகளுக்கு நன்மை பயக்குகின்றவரோ, எவர் அழிவில்லாதவரோ, எந்த தேவச்ரேஷ்டனான மஹேச்வரன் யக்ஞம் தபஸ் இவைகளுக்கு உரியவரோ, எவர் புனிதத்தன்மையும் நித்ய மங்களமும் பொருந்தியவரோ,

यो धारयति भूतानि जङ्गमस्थावराणि च ।
स्वीयमायाबलेनैव सर्वं वेदान्तसंमतः ॥

எவர் எல்லா ஜீவராசிகளையும், ஸ்தாவரஜங்கமங்களனைத்தையும் தன் மாயா பலத்தினாலேயே ரக்ஷிப்பவரோ, எவர் எல்லா வேதாந்தங்களினாலேயும் ஒப்புக்கொள்ளப்பட்டவரோ,

अजोऽपि सन्निर्विकारः संभवत्यात्ममायया ।
विचित्रयाऽनन्तशक्त्या गुणमय्या जगत्प्रभुः ॥

அந்த ஸர்வேச்வரன் ஸ்வயம் ஜன்மமற்றவனாயும் மாறுதல்களுக்கு உள்படாதவனாயும் இருந்தாலும், குணமயமானதும் விசித்ரமானதும் கரைகடந்ததுமான தன் சக்தியின் மஹிமையால், தன் மாயாபலத்தால், ஸ்வரூப விசிஷ்டராக ஆகி,

अरूप्यपि तु देवोऽयं भक्तानुग्रहकाम्यया ।
तत्तद्रूपं विधत्ते हि यस्य यत्र यथारुचिः ॥

ரூபமில்லாதவனானாலும் பக்தர்களை அநுக்ரஹிக்கும்பொருட்டு எவனுக்கு எங்கே எப்படிவேண்டுமோ அவ்விதமான ரூபத்தை எடுத்துக்கொள்கிறார்.

ध्यानेन सदृशं नास्ति शोधनं पापकर्मणाम् ।
निर्गुणं सगुणं वापि ध्यायेद्धरिमतन्द्रितः ॥

அந்தப் பரமாத்மாவை நிர்க்குணனாகவாவது ஸகுணனாகவாவது சோம்பலின்றி ஊக்கத்துடன் நாம் ஸர்வ பாபங்களையும் களைந்துவிட்டுப் பரிசுத்தர்களாகும்பொருட்டுச் சிந்தனைசெய்து தியானம் செய்வது தகும்.

यदा चित्तसमाधानं तदा ध्यायेत् हरिं शिवम् ।
सत्यं सत्यं पुनः सत्यं नास्ति ध्यानसमं तपः ॥

எப்பொழுது மனம் அமைதியான நிலைமையில் இருக்கிறதோ அப்போது ஈச்வரனை த்யானம் செய்யவேண்டும். மூன்று தடவை ஸத்யம் தியானத்திற்குச் சமமான தபஸ் கிடையாது.

इज्यादिसर्वधर्माणां श्रेष्ठं च सुलभं सताम् ।

யக்ஞம் முதலிய ஸர்வ தர்மங்களுக்கு மேலானது தியானம். இது ஸாதுக்களுக்கு ஸுலபமானது.

विविक्तदेश आसीनः विरागो विजितेन्द्रियः ।
प्रसन्नचित्तः सततं ध्यायेद्धृदि हरिं परम् ॥

தனிமையில் அமர்ந்து, ஆசைகளைக் களைந்தவனாய், இந்திரியங்களை ஜயித்தவனாய், அமைதி நிலவும் சித்தமுடையவனாய் எப்போதும் ஈச்வரத்யானம் செய்யவேண்டும்.

यत्र यत्र दृढाभक्तिः यदा यस्य हि जायते ।
तत्र तत्र महादेवः आविर्भवति सर्वदा ॥

எங்கு எங்கு நன்கு நிலைத்த பக்தியானது ஏற்படுகிறதோ அங்கு அங்குப் பரமேச்வரன் ஆவிர்ப்பவிக்கிறார்.

இவ்விதம் த்யானம் சொல்லப்பட்டிருக்கிறது. இதை அனுஷ்டிப்பது ஸாதாரணமாக யாவருக்கும் ஸுலபமல்ல என்பது சொல்லத் தேவையில்லை ஆதலால்,

557

ध्यानं कर्तुमशक्तानां श्रेयसे पापनाशिनीम् ।
अथपूजां प्रवक्ष्यामि वासुदेवविभूतिषु ॥

த்யானம் செய்யச் சக்தியற்றவர்களுக்கு ச்ரேயஸ் ஸித்திக்கும் பொருட்டு ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய பகவத் பிரதிமைகளின் பூஜையைப்பற்றிச் சொல்லுகிறேன் என்று தொடங்கிப் பின்பு சாஸ்திரங்களில் பூஜாவிதானம் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் பூஜையிலும் ஸாமக்ரீ, சிரத்தை, ஆசாரம், மந்த்ரம், க்ரியை - எவ்வளவு அம்சங்கள் இருக்கின்றன? அல்பபுத்தியும் சபலசித்தமுமுடைய மனுஷ்யன் ஆடம்பரமாகக் காரியங்களை ஆரம்பிப்பதும் அரைகுறையாகச்செய்து முடிப்பதும் ஸகஜமானதால் விதானப்படி அவன் பூஜை செய்து ஈச்வரனை ஆராதிப்பது எப்மட்டும் நிறைவேறப் போகிறது? மனுஷ்யன் வாழ்க்கையில் தவறுகள் மலிந்து கிடக்கின்றன. ஈச்வராபராதமும்தான். ஆகையால் பூஜா விதானத்தின் இறுதியில், அந்தப் பூஜையும் வியர்த்தமாகப் போகாமல் இருக்கும்பொருட்டு அபராதக்ஷமாபணப் பிரார்த்தனை முக்யத்துவத்தை அடைகிறது. தான் ஈச்வர விஷயத்தில் இடைவிடாமல் செய்துவரும் அபராதங்களை உணர்ந்து பூஜையில் குறைபாடுகளையும் நினைத்து மனம்நொந்து அஹமடங்கிப், பக்தன் பிரார்த்திக்கிறான்—"ஹே ஈச்வரா! நான் பூஜையா செய்தேன்! என் பூஜையின் அழகைச் சொல்லுகிறேன் கேள்,

मन्त्रहीनं क्रियाहीनं भक्तिहीनं सुरेश्वर ।
यत्पूजितं मया देव परिपूर्णं तदस्तु मे ॥

மந்தரத்தில் சிதைவுகள், க்ரியையில் குறைவுகள், பக்தியோ சூன்யம், ஹே தேவச்ரேஷ்டனே, ஆனாலும் பூஜையை முடித்துவிட்டேன். — என் அழகான பூஜையை! இவ்வளவுதான் மனுஷ்யனின் யோக்யதை. என் ஐயனே, தயவுபுரிய வேண்டும். என் குறைகளை எல்லாம் நினைக்காமல் என் பூஜையைப் பரிபூர்ணமான பூஜையாகவே நீ அங்கீகரிக்க வேண்டும்.

558



आवाहनं न जानामि न जानामि विसर्जनम् ।
पूजां चैव न जानामि क्षम्यतां पुरुषोत्तम ॥

பார்க்கப்போனல் எனக்கு என்ன தெரியும்? உள்ள பிரதிமையில் ஆவாஹனம்செய்து நீ அதில் ஆவிர்ப்பவிக்கும்படி செய்ய எனக்குச் சக்தியுண்டா? ஆவாஹனத்தை நான் அறிந்தாலல்லவா விஸர்ஜனத்தை நான் அறியப்போகிறேன். பூஜையைச் சரிவரச் செய்யத் தெரியாத நான் பூஜைசெய்வதாக, பிரகடனம் செய்துகொண்டிருக்கிறேன். ஹே புருஷோத்தமா! என் குற்றங்களை நீ பொறுத்தருள்வாயாக.

நான் தவறு செய்தாலும் உன்னிடமே அடைக்கலம் புகவேண்டியவனுயிருக்கிறேன்.

भूमौ स्खलितपादानां भूमिरेवावलम्बनम् ।
त्वयि जातापराधानां त्वमेव शरणं विभो ॥

பூமியில் கால்தடுக்கினவன் பூமியின்பேரில்தான் விழுகிருன். ஹே ப்ரபோ! உன்னிடம் அபராதியானவர்கள் உன்னையேதான் சரணமடையவேண்டும்.

त्वमेव माता च पिता त्वमेव त्वमेव बन्धुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या शरणं त्वमेव त्वमेव सर्वं मम देवदेव ॥

ஹே மஹாதேவ, நீயே என்தாய், நீயே என் தந்தை, நீயே என் பந்து, நீயே என் நண்பன், நீயே நான் கற்ற கல்வி. நீயே என் அடைக்கலம், நீயே எனக்கு எல்லாமும்.

अपराधसहस्राणि क्रियन्तेऽहर्निशं मया ।
दासोऽयमिति मां बुद्ध्वा प्रसीद परमेश्वर ॥

அல்லும் பகலும் ஆயிரம் விதத்தில் உன் கட்டளைகளை மீறி உன்னிடம் அபராதியாக நான் இருக்கிறேன். ஹே பரமேச்வரா, உன்னை அண்டின அடிமை என்று என்னை நினைத்து என்னிடம் நீ கருணைகாட்டவேண்டும்.

நமக்கும் ஈச்வரனுக்கும் இவ்வித சம்பந்தம் நிலவுகிறதாக நம் பெரியோர்கள் கண்டிருக்கிருர்கள். இதை அனுஸந்தானம் செய்பவர்கள் அனுபவத்தில் காண்பவர்கள் தன்யர்களாவார்கள். அவர்களே ஆனந்தத்தின் சுவையறிந்தவர்கள்.

---

559

# அப்பர் உவமையுள் ஆமையும் ஒன்று

சித்தாந்த ரத்நாகரம்,

புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

**ஆமையைச் சூடுமிகாத உலைநீரில் இட்டால், ஆநந்தமாகத்திளைக்கும். சூடு ஏறஏற ஆமைக்கு அழிவு நெருங்கும். புலன்வழி நடக்கும் மாக்களும் அதனல் விளையும் பெருந்துன்பங்களை அறிவதில்லை. புலனெறி நீங்கி அருள்நெறியில் ஒழுகுவதே பேரின்பம் பயப்பது.**

ஆமை நீருள் வாழும் உயிர் என்பது முன்பே அறிந்ததே ஆயினும், அதன் இயல்புகள் எல்லாம் நமக்குத் தெரியா. உயிர் நூலறிஞர் அறிந்தது மிகுதியாயிருக்கலாம். நம் முன்னோர் அறிந்து உணர்த்தியவற்றுள் ஓரியல்புமட்டும் இதில் எழுதப்படும். இதனல் நமக்கு உண்டாகும் பயன் பெரிது. துன்பத்தில் வீழ்வதை இன்பத்தில் வாழ்வதாக எண்ணி, மீண்டும் மீண்டும் பிறந்திறந்து துயருறுந் தொல்லையைத் துறக்கவிரும்புவார்க்கு இதுபோன்ற உண்மையும் உவமையும் பெரும்பயன்விளைக்கும்.

கூற்றுவன் உடம்பும் உயிரும் ஒருங்குகூடிநிற்பதை இருகூறுபடுத்தும் ஒருவேளையை உற்றுநோக்கியிருக்கின்றான். உடல்வேறு உயிர்வேறாகக் கூறுபடுவது உயிரின்வினையும் அன்று. உடலின் செயலும் அன்று. கூடிய இரண்டற்கும் உள்ள பொதுத்தொழிலும் அன்று. அவற்றிற்கே உரிய வேலையாயிருந்தால், உயிர் நினைத்தவாறே உடலோடு கூடவும் பிரியவும் கூடும். கூடியதை அறிந்து மகிழாத உயிர் உடலினின்றும் பிரியும்வரையில், 'பிரிந்துவிடுவேனே' என்றும், 'இவ்வுடம்பு பிரிந்துவிடுமோ?' என்றும் வருந்துகின்றது. உயிரே உடம்பை எடுத்துக்கொள்வதாயின், அவ்வருத்தம் அடையக்காரணமில்லை. அழகற்ற உடலைத்தள்ளி, அழகுற்ற

உடலைக்கொள்ளலாம். உடலை அடைவது உயிர்வயத்தில் இல்லாமையால், வந்த உடலைச் சுமந்து வருந்தி நடத்துகின்றது. உடலினின்றும் பிரிப்பது உயிர்க்கும் உடற்கும் வேறான ஒன்றன் காரியம். அது திருவருட்குள்ள பலவேறு ஆற்றல் (சக்தி)களுள் ஒன்று. அஃது அவ்வவ்வுயிர்செய்த கருமத்திற்கு ஏற்றவாறு நிகழும். 'காசிக்குப் போனாலும் **கருமம்** தொலையாது' என்பது முதுமொழி. கருமத்தை உணர்ந்து ஒத்துக்கொண்டு, அதற்கு அஞ்சி ஒழுகும் பூமியே நாம்வாழும் பூமி. அதனால்தான் இதைக் **கருமபூமி** என்றும் வழங்கிவருகின்றனர்.

இவ்வுலகவாழ்க்கை ஒரு வலைபோல்வது. இதில் இன்பம் இருப்பதாக எண்ணித் துன்பத்தையே அநுபவிப்பது உயிர். எல்லாவுயிர்க்கும் இது **பொது**. மக்களுயிர்க்கோ **சிறப்பு**. அறிவிற்சிறந்த மக்களும் அறியாமையுடைய விலங்கு முதலிய வையும் இத்திறத்தில் ஒன்றாகமாட்டா. மாக்கள் இவ்வுலக வாழ்வாகிய வலையிற் சிக்கிக்கொண்டு, துன்பத்தை இன்பமாக அநுபவிப்பது மிகவருந்தத்தக்கதாகும். சைன முனிவர் ஒருவர், அந்நிலையில் மாக்கள் உலகவலைப்பட்டு வருந்துவதைப் பலமுறை கருதினார். மாக்களது அந்நிலைக்கு வருந்தினார். அவ்வருத்தத்திற்கு அவரை அறியாமலே ஓர் ஒப்புண்டு என்று அவரது உள்ளம் உணர்ந்தது. ஒப்பாவன பற்பல உள்ளன. உள்ளவாறு உணர்ந்து உணர்வுடையோரால் உரைக்கப்பட்டன. பாட்டாகவும் பாடப்பட்டன. பட்டாலும், பட்ட-படுகின்ற துன்பத்தை விட்டபாடில்லை. விட்டொழிக்காது துன்பவலையுட்பட்டு வருந்தும் மாக்களை அறிவுறுத்த விரும்பி, அதை ஒரு வெண்பாவில் வெளியிட்டார். அது **பேதைமை** என்னும் தலைப்பின்கீழ் உள்ள நாலடிப் பாடலாகும்.

"கொலைஞர் உலைஏற்றித் தீமடுப்ப ஆமை
நிலைஅறியா தந்நீர் படிந்தாடி அற்றே
கொலைவல் பெருங்கூற்றம் கோட்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு." (331)

இதில், முன்னீரடியில் ஆமையின் இயற்கையொன்று கூறப்பட்டது. பின்னீரடியில் மக்கள் இயற்கை குறிக்கப்பட்டது. ஆமையினியல்பு மக்கள் இயல்பிற்கு ஒப்பாக்கலுற்றது.

இங்குக் குறித்த ஆமையின் இயல்பு யாது? இதுவே இப்பொழுது எழத்தக்க கேள்வி. உயிர்களைக் கொன்று, அவற்றின் உடலைத்தின்று, தம் உடலைப் பெருக்கும் மாக்கள் **கொலைஞர்** ஆவர். அவருள் ஆமையைக்கொன்று தின்று கொழுத்துலவுகின்றவரும் உளர். அவர்க்கு அவ்வாமையைக் கொல்லும் உபாயம் நன்குதெரியும். ஆமையை மாய்ப்பது அரிது. நெருப்புமூட்டி, உலைநீர்ப்பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி, அதில் ஆமையை இட்டுவிடுவர். தீயும் சுடர்விட்டு எரியும். நீரும் சூடுற்றுக் கொதிக்கும். ஆமையும் ஆநந்தமாக நீரில் முழுகித் திளைக்கும். நீர் காயக் காய ஆமைக்கு அழிவு அணுகிக்கொண்டே இருக்கும். அழிவுவரும் அந்த நிலையை ஆமை அறியாது. அதைத்தான்,

"கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலை அறியாது அந்நீர் படிந்தாடி யற்றே."

என்று உவமைப்படுத்தியுணர்த்தினர். இதற்குரிய (உவமேயச்) செய்தி அவர் உள்ளத்தில் ஊன்றிநின்ற பழமை உடையது. ஆமைக்கு உலைநீரில் வாழ்வது இன்பத்தை விளைக்கின்றது; மாக்களுக்கு உலகவலையில் சிக்குண்டு இருப்பது சுகத்தைத் தோற்றுகின்றது; ஆமையை அணுகிநிற்பது அழிவு. மாக்களை மருவிநிற்பது மாய்வு. ஆமைக்கும் மாக்கட்கும் பின் விளைவை அறியாத குற்றத்தில் சிறிதும் வேறுபாடில்லை. அந்நிலையில் மாக்கட்குத் தனியாக மாண்பு சிறிதும் இல்லை. மாள்வுதான் உண்டு. பின்விளையும் மாள்வை முன் அறியாத இழிவை 'மாண்பு' என்று எதிர்மறையிலக்கணையாலே குறித்தார் அப்புலவர். இதனால், மாக்களது பேதைமைக்கு ஆமையின் பேதைமை ஒப்பாகும் உண்மை விளக்கப்பட்டது. இது சைன முனிவர் பாடலிற் கண்டது.

சைனமதத்திற் சேர்ந்தொழுகிச் சைவ நெறியின் மீண்டுய்ந்தருளிய திருநாவுக்கரசு நாயனார் இவ்வொப்புமை யைத் தமது திறத்தில் வைத்துப் பாடி, நமது திறத்தை நாடச்செய்திருக்கும் உண்மையை நாம் அறிதல் அத்தியா வசியகமாகும். அவ்வாசிரியர் அருளியவாறுவது :—

'என்னை நடுங்கச்செய்து துன்புறுத்துவோர் ஐவர். அவரோ கள்வர். கள்வர்க்கு நடுங்காமலிருப்பவர் எவருளர்? தொலைவிலிருக்கும் கள்வராயின் நடுக்கம் உண்டாகாது. சூழ்ந்து (வளைத்துக்) கொண்ட கள்வர்க்கு நடுங்காதிருப்பது எவ்வாறு? உயிர் உடலினின்றும் நீங்குவதில் சிறிதும் வெறுப்பில்லாதவராயினும், உடம்பில் உள்ளபோதே உய்ய விரையும் உத்தமர்க்கு, அவ்வுய்தி எய்துமுன் உடம்பிற்குக் கேடுவருவதாயின், அஞ்சாதிருத்தல் ஒல்லாது. ஐவரும் என்னைச் சூழ்ந்து நடுக்கத்தை விளைக்கின்றனராயினும், அவர் சூழ்ச்சிக்கு ஆளாகி, ஆவர் ஆட்டுமாறு ஆடியும், ஓட்டுமாறு ஓடியும், காட்டுமாறு கண்டும், ஊட்டுமாறு உண்டும் எனக்கு இளைப்புண்டாய்விட்டது. இளைத்துப்போயும் அவர்திறத்தில் எனக்கு ஓர் இன்பம் உண்டுபோலத் தோன்றி, அவ்வின்பத் தையேநாடி, அவர்வலையிலே சிக்கிநிற்பதற்கே மீண்டும் அவாவுகின்றேன்.

உற்றுநோக்கின், அங்நிலையும் ஆமையின் நிலைபோலத் தான் இருக்கின்றது. உலையை அடுப்பின்மிசை ஏற்றி, தழலும் எரியுண்டநீரில் முழுகித் திளைக்கும் ஆமைக்குத் தெளிவு இருப்பின், அவ்வெங்நீரில் திளைக்குமோ? நீரின் ஓரளவு வெப்பம் ஆமையின் உடலுக்கு இனிதாயிருந்தது. வெப்பத் தின் முதிர்ச்சி அதன் அழிவுக்கு ஏதுவாயிற்று. அதைத் தெளியாமை அக்களியாமைக்கு அழிவாக்கிற்று. மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐவரால் வரும் ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை ஐந்தும் பிறப்பிறப்பாகிய துன்பத்தை விளைக்கும் என்று தெளியாமையே பேரின்பவாழ்வைப்பெற வொட்டாது, பிறந்திறந்துழலுந்துன்பத்தைச் செய்கின்றது. தெளிந்து திருவருள்பெற்றுச் சிவமாதற்கே பிறந்தேன்

தெளியாமல், ஐம்புலத்தாசை வலையுட்பட்டுப் பிறவிப் பெருங் கடலில் விழுந்து துன்புறுதற்குப் பிறந்தேனல்லேன்' என்பது. இதனை உணர்த்தும் திருநேரிசைப் பாடலாவது :-

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கம்செய்யத்
தளைத்துவைத்து உலையைஏற்றித் தழல்எரி மடுத்தநீரில்
திளைத்துநின்று ஆடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்துநின் றுடுகின்றேன் என்செய்வான் தோன்றினேனே"

பானுகோபன் வீரவாகுதேவர் முன்போந்து போர்செய்த களிப்பில் முழுகித்திளைத்திருந்து, தான் தன்குலத்தொடு வேரறச்சாய்ந்தொழிய இருக்கும் பின்விளைவைத்தெளிந்திலன். அது குறித்து, தணிகைப் புராணத்தில், கச்சியப்ப முனிவரர் **"உலைபடும் இளவெந்நீரின் உளம்மகிழ் கமடம் (ஆமை) ஒத்தான்"** என்று பாடியருளினர்.

இவ்வாறு மூவரும் ஆமையின் தெளியாமையையும் அதன்பின் எய்தும் அழிவையும் உணர்த்தும் வகையில், உலகவலைச் சிக்கலையும் அதனால் பிறந்திறந்துழலும் துன்பத்தையும் உணர்த்தி, மக்களனைவரும் கடவுள் நெறியில் ஒழுகிப் பேரின்பம் எய்தக் கடவர் என்று வற்புறுத்தினர்.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் – உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0
தபாற்செலவு வகையரு ரூ. 2—0—0

கிடைக்குமிடம் :- மானேஜர்,
தருமபுர ஆதீனம், தருமபுரம்.
மாயூரம் போஸ்ட்.

**புதிய தொடர் கதை:**

# மாசில் வீணை

**வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன்**
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

*இசை இதயத்திலே இன்பநாதத்தைத் தட்டியெழுப்பும் தெய்விக லாகிரி. கடவுள் உணர்ச்சியைக் கருத்திலே மலர வைக்கும் கதிரொளி அது. மாசில்லாத வீணையினின்று எழும் நரம்போசை — இனிய இசை — உள்ளத்திலே மெல்ல மெல்ல அன்பு விதையைத் தூவுகிறது.*

*இந்த வீணைபோலச் சிலர் வாழ்வு அமைந்துவிடுகிறது. வாழ்க்கையில் இன்ப அலைகள் அலைமோதுகின்றன. அப்பப்பா! அதற்குத்தான் எத்தனை இடையூறுகள்! இதனைத்தான் இந்தப்புதிய தொடர் கதை பின்னணியாகக்கொண்டு பின்னிக் காட்டுகிறது.*

*தமிழ்நாட்டின் பழைய இலக்கியத்தையும், பாண்டிய அரசியல் நிலையையும் அடிப்படையாகக்கொண்டு, இனிய இசையை எழுப்பத் தொடங்குகிறது "மாசில் வீணை!" தொடர் கதையை இனித் தொடர்ந்து ரசிப்பது உங்கள் பொறுப்பு.*

முதலாம் அத்தியாயம்

## பூங்காட்டு மண்டபம்

**நள்ளிரவு**

எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது; அந்த ஆற்றின் இருபுறமும் வளைந்துகொண்டிருந்த அடர்ந்த மரக்கிளைகள் காற்றின் சலசலப்பில் பயங்கரமாக ஆடின. எங்கும் பலவிதமான பிராணிகளின் ஒலி 'கிரீச்' என்ற சுருதிகூட்டிக்கொண்டிருந்தது. அமாவாசைக்கு மறுநாளாதலால் ஒரே கும்மிருட்டு. கவ்விக்கொண்டிருக்கும் காரிருள். அந்தக்காடு நள்ளிரவென்னும் கன்னியால் எங்கும் பயங்கரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

D 65



ஆற்றின் கரையில் இருந்த அரசமரத்தின் வேரில் கட்டப்பட்டுக்கிடந்த தோணி ஆற்றுத்தண்ணீரின் அதிவேகத்தால் அசைந்தாடிக்கொண்டிருந்தது.

அதோ! காட்டின் இடையே தோன்றும் அந்த மாளிகை மேல்மாடத்தில்மட்டும் 'மினுக்மினுக்' கென்று ஒரு சிறு வெளிச்சம் தெரிந்துகொண்டிருந்தது.

மாளிகையின் மேல்மாடத்தில் உட்புறம் தாழிடப்பெற்ற தனியறையில், பறம்புநாட்டின் குறுநிலமன்னர் வீரவேள் உலாவிக்கொண்டிருந்தார். இரவின் பாதிநேரம் கழிந்தும்கூட இன்னும் அவர் தூங்காமல் இருப்பது ஆச்சரியந்தான்! கையைப் பின்புறம் கட்டிக்கொண்டு முன்னும் பின்னுமாக நடந்துகொண்டிருந்தார்; முகத்திலே சிந்தனை ரேகைகள். சற்று நேரத்துக்கொருதரம் அவரது விசாலமான நெற்றி சுருக்கமடைந்து விரிந்தது. இதைப்பார்த்தால் பறம்புநில வேந்தர் ஏதோ பெரிய ஆலோசனையில் இருக்கின்றாரென்பது யாருக்கும் விளங்காமற்போகாது.

மாளிகையின் ஓரமாக மேல்மாடியளவுக்கு வளர்ந்திருந்த மருதமரக் கிளையில் இரண்டு கிளிகள் தங்கள் கூட்டிற்குள் 'கீச்சுக்கீச்சென்று' காதல்பாஷை பேசிக்கொண்டிருந்தன. அதைத்தவிர மாடத்தில் வேறு சப்தமே இல்லை.

சற்றுநேரத்துக்கொருதரம் மன்னர் சாளரத்தின் பக்கத்தில் சென்று வெளியில் எதையோ உற்றுப்பார்த்தபடி நிற்பார்; பின்பு மஞ்சத்துக்கருகில் வருவார்; பின்னுமொரு முறை நடப்பார். அடக்கிவைக்கப்பட்டிருந்த தூண்டா விளக்கின் வெளிச்சம் மன்னரது சிந்தனை படர்ந்த முகத்துக்குத் தனி சோபையைக் கொடுத்தது.

கம்பீரமான மன்னர் திருமுகத்திலே கணக்கில்லாமல் நிலவிய அந்தக் கவலைரேகைகளுக்குத்தான் காரணம் என்ன?

✷

பறம்புநாடு அந்தக்காலத்தில் உரிமைபெற்ற நாடாக இருந்தது; அழகான மலை. நல்ல பாதுகாப்பு. தகர்க்கமுடியாத அரண். எண்ணிப்பார்க்கமுடியாத உயரமான மதில்கள். ஆழங்கான இயலாத அகழி. அப்பப்பா! பகைவர்கள் பறம்பு நாட்டுக்குட் போகவேண்டுமென எண்ணுவது ஒரு பகற் கனவு. அப்படியிருந்தது அத்திருமலையின் அமைப்பு. இயற்கைத்தாய் இயற்றிக்கொடுத்த இணையற்ற இடம் அது.

சேர, சோழ, பாண்டியர்க்குக் கொஞ்சம் பெருமைதான். சிறியநாடு – முல்லைமொட்டுப்போல சிறிய அரண் – இதற் குள்ள சிறப்போ எண்ணற்றது – இதைநினைத்துப் பார்த்துப் பார்த்துப் பறம்புநாட்டின்மீது அளவற்ற வெறுப்புக்கொண் டிருந்தார்கள் மூன்று தமிழ் மன்னர்களும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பறம்புநிலமன்னர் வீரவேள் மக்களிடத்திலே மகத்தான மதிப்புப் பெற்றிருந்ததும் முக்கிய மான காரணங்களுள் ஒன்றாகும். இசை, சிற்பம், கவிதை போன்ற கலைகளுக்கு வீரவேள் கொடுத்திருந்த உயர்வு சொல்ல ஒண்ணாதது. கலைவாணரும், கவிவாணரும், சிற்பிகளுமாகக் கணக்கற்றபேர்களோடு எப்போதும் காணப்படுவார் மன்னர்.

அரண்மனை மாளிகையின் உள்ளே எப்போதும் வீணை நாதம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

அரசாங்க அலுவலகக் கட்டிடத்தில் பாவலரும் நாவல ரும் எந்தவேளையிலும் ஓலையும் எழுத்தாணியும் கொண்டு கவிதையாத்தபடியே இருப்பர்; எத்தனை எத்தனை காவியங் களும், கவிதைகளும் உதிர்ந்தபடி இருக்கும் அப்புலவர்கள் வாயினின்றும்.

அரண்மனை அந்தப்புரத்தை அடுத்துள்ள பூஞ்சோலை யின் நடுவே இருந்த அந்த அழகான மண்டபத்தில் – பூஞ் சோலை மாளிகையில் – இராப்பகலாக, சிற்பிகளின் கல் உளிச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். இப்படி, கலைகளைக் கண்ணைப்போல் காத்துவரும் ஒரு வேந்தர் இருந்தால் நாட்டில் அவர் பெருமைக்குக் காரணம் கேட்பானேன்?

மக்கள் கலைமன்னர் வீரவேளின் ஆட்சியின்கீழ் இருப்பதே ஒரு பெருமை என எண்ணிப் பெருமிதங்கொண்டிருந்தார்கள். மன்னர் வாழ்ந்த பகுதிக்குப் 'பிரான்மலை' என்று பெயரிட்டு அந்தப் பகுதியை ஆண்டவன் உறையும் கோயிலாகவே கருதி வழிபட்டார்கள். இப்படியெல்லாம் பொது மக்களின் நெஞ்சை அள்ளும் பெருமகனாராக விளங்கிக் கொண்டிருந்தார் வீரவேள்.

வீரவேளின் பண்புக்கு ஏற்ப அவரது செல்வங்களாகிய இளவரசன் பாரிவேளும், இளவரசி பொன்னியும் பிறந்து வளர்ந்துவந்த பெருமையும் அவர்களுக்கு இருந்தது.

முக்கியமான அரசியல் பிரச்னைகளை ஆராய்வதற்கென்று அமைந்த அரசமாளிகை ஒன்று உண்டு. பிரான்மலைக்கும் அந்தமாளிகைக்கும் முப்பதுகாததூரம். அடர்ந்தகாட்டில் – இருண்ட புதர்களுக்கு இடையில் பயங்கரமான சூழ்நிலையில் அமைந்தது அந்தமாளிகை. மன்னர் வீரவேளுக்கும், மதியமைச்சர் எழிலர்க்கும் மட்டுமே பழக்கப்பட்டிருந்தது அந்த மாளிகை.

நாட்டைப்பற்றிய பெரிய அந்தரங்கமான பிரஸ்னைகளைத் தனிப்பட்டமுறையில் பறம்புநாட்டு அரசபரம்பரை பரம்பரை பரம்பரையாக இருந்து ஆராய்ந்துவருகிற மண்டபம் அது. 'பூங்காட்டு மண்டபம்' என்று அதன் பழம்பெயர். அந்தக்காடு உள்ள பகுதி பூங்காடு என்றே எல்லோராலும் சொல்லப்பட்டுவந்தது. ஆகவேதான் அப்பழைய ஆராய்ச்சி மண்டபத்தைப் பூங்காட்டு மண்டபம் என்றே அனைவரும் அழைத்துவந்தனர்.

நாம் முதலில் – நள்ளிரவில் மன்னர் வீரவேள் பெரிய ஆலோசனையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறியது அந்த மண்டபத்தில்தான். அவரது பரபரப்பான போக்கும், தீவிரமான யோசனையும் அவரது மனத்தை ஆட்கொண்டிருந்தது பயங்கரமான – பெரிய – பிரஸ்னையாகவே இருக்கலாம் என்று சூசகம் சொல்வதுபோல் இருந்தது.

*

மேல்மாடத்தில் மன்னரின் சிந்தனையைப் பக்கத்தில் கொஞ்சதூரத்தில் இருந்த புதரின் பக்கத்திலிருந்துகொண்டு ஒரு உருவம் கவனித்துக்கொண்டிருந்தது.

இரண்டாம் யாமத்துக்குமேல் இராப்பொழுது கழிந்தவுடன் மேல்மாடத்திலிருந்து விளக்கு வெளிச்சம் சிறிதாக அடக்கிவைக்கப்பட்டது.

மன்னர் மஞ்சத்தில் படுத்தார். சற்றுதூரத்தில் மன்னரின் செயல்களை மங்கிய விளக்கொளியில் உற்று கவனித்துக்கொண்டிருந்த அவ்வுருவமும் அவ்விடத்தைவிட்டு மெதுவாக நடந்தது. நடந்துசெல்லும்போது இலைகளின் அசைவால் புதர்களில் சிறிய சத்தம் கேட்டது. வெகுதூரம் நடந்த அவ்வுருவம் சற்றுநேரத்துக்கெல்லாம் இருளில் மறைந்துவிட்டது.

(தொடரும்)

---


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

**ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0**

இவ்விதழ் ஒவ்வொரு ஆங்கிலமீ 10உ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டினிடையிலே சேருவோருக்குச் சேர்ந்த மாதத்திலிருந்து ஓராண்டுக்கு அவர்களின் கையொப்பத்தொகை கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

**செயலாளர்,**

**"ஞானசம்பந்தம்" காரியாலயம்**

**தருமபுரம், மாயூரம் P. O.**

சிறுகதை.

# தெய்வம் தந்தது

நெல்லை, ம. சிவசம்பு.

காலைக்கதிரவன் தன் கதிர்களைப் பரப்பிக்கொண்டு கீழ் வானத்தில் எழுந்தான். பறவைகள் ஆரவாரத்துடன் பாடிக் கொண்டிருந்தன. உழவர்கள் இன்பம் மிகுந்த உள்ளத் தோடு கழனிநோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். கோயில் மணி ஓம் ஓம் என்று ஒலித்துக்கொண்டிருந்தது. எங்கும் இன்பம். எல்லோரும் இன்பமாக இருந்தனர். அந்த நேரத் தில் எனக்குமட்டும் இன்ப உணர்ச்சியே ஏற்படவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் கடன்காரர் வந்துவிடுவார். அவ ருக்கு என் சொல்வது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். என் உள்ளம் "கடன்கொண்டான் நெஞ்சம்போலக் கலங் கினான் இலங்கை வேந்தன்" என்றதில் கம்பரது உவமையை எண்ணியது. அந்த நேரத்தில் கோயில் கோபுரத்தில் இருந்த ஒலிபெருக்கி "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்று பாடியது. துன்பப்பட்டிருந்த என் உள்ளத்துக்கு இது ஓரளவு ஆறுதலைத் தந்தது.

"சார்! இராசிபலன்போட்ட பேப்பர், ஒரு அணு" என்று ஒரு சிறுவன் கத்தினான். உடனே அவனைக் கூப்பிட்டு அந்தப் பேப்பரை வாங்கினேன். இராசிபலனைத் திருப்பினேன். ஆர்வத்துடன் படித்தேன். நல்ல பலன்களே எழுதப்பட் டிருந்தது. கடன்தொல்லை தீரும். நல்ல லாபம் உண்டாகும். இவ்வாரக் கடைசி இரண்டு நாட்கள் சற்று நிதானத்துடன் நடக்கவேண்டும் என்று எழுதி இருந்தது. இதைப் படித்து விட்டு முதல்பக்கம் புரட்டினேன்.

**இனும்! ரூ. 500 இனும்!!**

குழந்தையும் தாயையும் காணோம்! கண்டுபிடித்தவர் கீழ்கண்ட விலாசத்தில் ஒப்புவிக்க வேண்டுகிறோம்

குழந்தையின் பெயர்: முத்து. வயது ஆறு. மாநிறம். இடக் கையில் மச்சம் இருக்கும். நெற்றியில் வடு இருக்கும். குழந்தை காணாமல்போய் ஒருவாரம் ஆகிறது. குழந்தை காணாமல் போனதைக் கேட்ட தாய் அதே நினைப்பால் புத்தி நிதானம் இல்லாமல் இருந்தாள். நேற்று இரவு தாயையும் காணோம்.

பெயர்: தையல்நாயகி. வயது 28.
உயரம் 4-6' நிறம்: நல்ல சிவப்பு.

கண்டுபிடித்தவர் நேரில்கொண்டுவந்து ஒப்படைக்கலாம். அவர்களுக்குச் செலவுத் தொகையும் கொடுக்கப்படும்.

இப்படிக்கு,
**ச. வைத்தியநாதன்,**
பேங்க் ஏஜெண்டு,
உஸ்மான் ரோடு, சென்னை.

இதைப் படித்ததும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் சிந்தனை சென்னை நோக்கிப் பறந்தது.

வைத்தியநாதர் நல்ல மனிதர். நிறையச் சொத்து உள்ளவர். எல்லையில்லாத கடவுள்பற்று உடையவர். பிள்ளை வரம்வேண்டி அவர் கொள்ளாத நோன்பேகிடையாது. காசி, இராமேச்சுவரம்முதலிய க்ஷேத்திர தீர்த்தயாத்திரைசெய்தார். குழந்தை இல்லாததுகண்டு இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். சென்னையில் அவர் வீட்டின் எதிரில் தான் நான் இருந்தேன். அவரது குடும்பநிலைபூராவும் எனக்கு நன்கு தெரியும். இவருக்கு நாற்பது வயதிற்குமேல் அவரது இளையமனைவி தையல்நாயகி முத்துக்குமரன் அருளால் தங்க விக்ரகம்போல் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தையை அன்பாகச் செல்வத்துடன் வளர்த்தனர். நிறைய நகைகள்போட்டுக் குழந்தைக்கு அழகு பார்ப்பார்கள். வைத்தியநாதனும் தையல்நாயகியும் குழந்தைமீது எல்லை இல்லா அன்புவைத்திருந்தனர். எவனோ நகைக்கு ஆசைப் பட்டுத்தான் குழந்தையைத் தூக்கிச் சென்றிருக்கவேண்டும்

என்று நினைத்தேன். எவ்வளவு நல்லகுடும்பம். இந்தக் குடும்பத்திற்கா இந்தக்கதி வரவேண்டும் என்று வருந்தினேன்.

வைத்தியம்! வைத்தியம்! என்று குழந்தைகள் கத்தவே என்பார்வை தெருப்பக்கம் ஓடியது. தெருவில் ஒரு பெண் ஒரு கருங்கல்லை எடுத்து வைத்துக்கொண்டு கண்ணே! வாடா! வரமாட்டே! வந்தால்தான் மாம்பழம் என்று கூறிக்கொண்டிருந்தாள். நான் விரைந்து சென்றுபார்த்தேன். ஆம்! அதே பெண்தான். தையல்நாயகிதான். எல்லை இல்லாத மகிழ்ச்சி அடைந்தேன். மெதுவாக அருகில்சென்று தையல் நாயகி என்று கூப்பிட்டேன். ஏய்! என்பிள்ளையைத் தூக்கவா வந்தே? போயிடு! என்று கல்லை எடுத்து எறிய வந்தாள். எனக்கு என்ன செய்வது என்றே புரியாமல் இருந்தேன்.

வைத்தீஸ்வரன்கோவிலில் மண்டலாபிஷேகக் கிருத்திகை என்றால் கேட்கவாவேண்டும். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்தனர். இவள்பக்கமும் கூட்டம் அதிகமாகிவிட்டது. நான் உடனே ஒரு நண்பரைத் தையல்நாயகி அருகில் வைத்து விட்டு, தபால் நிலையம்நோக்கி விரைந்தேன். அந்தச்சமயம் பார்த்து, கோபுரத்தில் இருந்த ஒலிபெருக்கியில் ஒரு பிரசங்கி

"பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக்கண்டாராய் மனமே."

என்ற பாட்டைச் சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு வெறுப்புடன் கோபமும்வந்தது. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ என்ற எண்ணத்துடன் விரைவாக நடந்தேன். இந்தநேரத்தில் ஒலிபெருக்கி

'ஒருகுழந்தை பெற்றோரைக் காணுமல் அழுகிறது. மாநிறம். நீலக்கால்சட்டை போட்டிருக்கிறது. சுமார் 6 வயது இருக்கும். குழந்தையின் பெயர் முத்து. அலுவலகத்தில் இருக்கிறது. வந்து கூட்டிச்செல்லவும் என்று அலறினது.

இதைக் கேட்டவுடன் என்னையறியாமலே என்கால் கோயிலுக்கு நடந்தது. கோயிலில்சென்று குழந்தையைப் பார்த்தேன். ஆம்! அதேமுத்துதான். வைத்தியநாதனின் பிள்ளைதான். எனக்கு எல்லை இல்லாத மகிழ்ச்சி உண்டாயது. குழந்தைக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் இருந்ததால் மாமா என்று கூப்பிட்டது. நான் அலுவலகத்தில் சொல்லி விட்டுக் குழந்தையை எடுத்துக்கொண்டு என் வீடுநோக்கி விரைந்தேன். அங்கு, தையல்நாயகியைக் காணவில்லை. எனக்கு ஆத்திரமும் அழுகையும் வந்தன. அங்கு நின்ற ஒருவரை இங்கிருந்த பைத்தியப்பெண் எங்கே என்றேன். அவர் யாரோ ஒரு வயோதிகர் காரில்வந்தார், இவளைக் கண்டவுடன் காரை நிறுத்திவிட்டுத் தையல்நாயகி என்று கத்தினார். அந்தப் பெண்ணும் ஓவென்று அழுதாள். பின் அப்பெரியவர் அந்தப் பெண்ணைக் காரில் ஏற்றிக்கொண்டு போய்விட்டார்; என்று சொன்னார். எனக்கு ஒன்றும் ஓடவில்லை. என்செய்வது என்று தெரியாமல் விழித்தேன். அந்த நேரத்தில் ஒலிபெருக் கியில் பிரசங்கி "நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது. யார் என்ன செய்யமுடியும் என்றார்." அதற்குள் அவரை இடைமறித்து இந்தச் செய்தியைக் கூறிவிடுகிறேன் என்றார் ஒருவர். நான் அவர் என்ன சொல்லப்போகிறார் என்று உற்றுக் கவனித்தேன்.

"சற்று நேரத்திற்குமுன் இங்கிருந்த முத்து என்ற பையனைத் தனது தங்கை குழந்தை என்று எடுத்துச் சென்றவர் குழந்தையை உடனே இங்குக் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டுகிறோம். குழந்தையின் பெற்றோர்கள் இங்கு இருக்கின்றனர். ஒப்புவிக்கத்தவறினால் போலீஸாரிடம் ரிப்போர்ட் செய்யப்படுவார் என்றார்.

நான் பயத்துடன் கோயிலை அடைந்தேன். கோயில் வாசலில் காரின் அருகில் தையல்நாயகியும் வைத்தியநாதனும் நின்றுகொண்டிருந்தனர். என்னைக் குழந்தையுடன் கண்ட வைத்தியநாதன் **தெய்வம்** தான் குழந்தையைக் கூட்டி வருகிறது என்றார். தையல்நாயகி எல்லை இல்லாத மகிழ்ச்சி

அடைந்தாள். முத்துவும் அம்மா என்று தையல்நாயகி பக்கம் ஓடினான். வைத்தியநாதனிடம் நடந்த எல்லாச் செய்தியையும் சொன்னேன். அவரும் நேற்று, பேப்பரில் செய்தியைக் கொடுத்துவிட்டு, காரை எடுத்துக்கொண்டு தையல்நாயகியைத் தேடிவந்தேன், கொஞ்சதூரத்தில் ஒலி பெருக்கி செய்திகேட்டு முத்துவைக்காணக் கோயிலுக்கு வந்தேன். வரும் வழியில் தையல்நாயகியைக் கண்டேன். பின் கோயில் வந்தவுடன் முத்துவையாரோ ' கூட்டிச்சென்றதாகக் கூறினார். நான் என்னசெய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் நீர் குழந்தையைக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள். நீங்கள் செய்த உதவியை நான் மறக்கவே மாட்டேன் என்றார். அதற்குள் முத்துமாமா என்று கூப்பிடவே அத்திசைப்பக்கம் என் பார்வை சென்றது.

அப்பொழுது என் கடன்காரர் சிவராமர் வந்துகொண்டிருந்தார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. அந்தச் சமயம் பார்த்து பேப்பரில் போட்டபடி ரூபாய் ஐந்நூறு என்று ஐந்து நூறுரூபாய் நோட்டை என் கையில் கொடுத்தார் வைத்தியநாதன். நோட்டை வாங்குவதற்கும் சிவராமர் என் அருகில் வருவதற்கும் சரியாக இருந்தது. எனது கடன் தொகையை அவரிடம் கொடுத்தேன். அப்பொழுதுதான் பிரசங்கி ஒலிபெருக்கியில் தன் பிரசங்கத்தை முடிக்கும் முறையில்,

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே."

என்று கூறிமுடித்தார்.



574

# வாழ்க்கை அல்லது போராட்டம்

திருமதி, க. முத்துலட்சுமி தருமபுரம்.

**வாழ்க்கைக்கு ஒப்புரைக்கப் பல உண்மைகள் கிடைக்கும். சிற்சில இங்கு விளக்கப்பட்டிருக்கின்றன. பொய்வாழ்வும், மெய்வாழ்வும் இன்னது என்று பகுத்தறிந்தால்தான் இன்ப வாழ்வை அடைய முயற்சிதோன்றும் அதற்கு வாழ்க்கைப் போராட்டம் நிகழும்.**

வாழ்க்கை என்பது என்ன? விடையளிப்பதற்கு நாம் போராட வேண்டியதுதான். வாழ்க்கை என்பது எரிய வேண்டிய கற்பூரம், மிதக்கவேண்டிய தோணி; நீந்தி வரவேண்டிய ஆழ்கடல்; தண்டிக்கப்படவேண்டிய கைதி; குடிக்கவேண்டிய ஊற்றுநீர்; ரசித்துப் பார்க்கப் படவேண்டியப்பேசும்படம்; ஓடவேண்டிய புகைவண்டி; செவி உணரக் கூடியசங்கீதம். இவ்வளவு முக்யத்வம் வாய்ந்ததே வாழ்க்கை. ஆயினும் சிலசமயங்களில் கற்பூரம் நீரில் நனைந்து எரியாமல் போகலாம். தோணி மிதக்கையிலேயே கவிழ்ந்துவிடலாம். ஆழ்கடலில் சாமர்த்தியமாக நீந்துகையில் சுரு மீன்களால் பிடிபடலாம். தண்டனை நிறைவேறும் சமயம் கைதி தப்பியோடலாம். பேசும் படம் ரஸமான கட்டத்தில் அறுந்து விழலாம்; ஓடுகையில் புகைவண்டி சதிகார சூழ்ச்சியினல் கவிழ்க்கப்படலாம். சங்கீதம் உணர்ந்து அனுபவிக்கும் சமயத்தில் அபஸ்வரங்களை உதிர்க்கலாம். ஆகையால் வாழ்க்கை என்பது புரிந்துகொள்ள முடியாத அருமையான சிறுகதை. இல்லை! ஆழம் நிரம்பிய மெல்லியரின் உள்ளம்; செதுக்கத் திணறும் சிற்பச்சிலை, தவிர்க்கமுடியாத அரசியல் பிரஸ்னை. இஃதே வாழ்க்கை யெனப்படும். இன்பமும் துன்பமும் பங்கீட்டு அரிசியில் கலந்துகிடக்கும் கல்லும் நெல்லும்போல் வாழ்க்கையில் சிக்குண்டு கிடக்கிறது.

திரு. வெ. சா. சர்மா ஒரு கட்டுரையில் கூறுவதுபோல "மரம் நிழல் கொடுத்துக் கொண்டிருந்தால்மட்டும் போதாது. பலனையும் தரவேண்டும்." அதைப்போல் நூலறிவும் செல்வச் சிறப்பும் வாய்ந்திருந்தால் மட்டும் போதாது. பிறருக்குப் பயன் தரக்கூடியதாக இருப்பதே வாழ்க்கை. ஆம், அழகிய குழந்தைகளை உயிருடன் பெற்றெடுத்தால் மட்டும் பயனில்லை; அவர்களைப் பேணி, கல்வியளித்து நற்பண்பு வாயப்பெற்ற வீரத் தமிழ் மக்களாக்கவேண்டும். அதுபோலக் களங்கமின்மையும், களிப்பும், நிறைந்திருந்தால் மட்டும் வாழ்வு சிறப்படைய மாட்டாது பிறரது தூய்மையான வாழ்விற்கு ஒரு வழிகாட்டியாய் இருப்பதே வாழ்க்கை. மேலும் பிறருக்கு எவ்வகையிலும் துன்பம், சிரமம் இவைகளை அளியாது வாழும் வகையறிபவனே வாழ்வில் வெற்றி பெறுகிறான். ஆனால் வாழத் தெரியாதவனுக்கு, – இல்லை – வாழ்வை வெறுப்பவனுக்கு வாழ்க்கையெனும் தேன், ருசிக்க முடியாதபடி தேனீக்களுடன் அவன் புரியவேண்டிய முடிவற்ற போராட்டமாக இருக்கிறது. இவ்வகையில் வெற்றி காண்பவனே மனிதனாக உலவுகிறான்.

வாழ்க்கையென்பது மல்லிகைப்பூப் பரப்பிய படுக்கையல்ல; ஆனால் இன்பமென்னும் ரோஜா இதழ்களும் துன்பமெனும் அதன் முட்களும் கலந்து விரிக்கப்பட்டு, இதழ்கள் வாடியவுடன் உதறியெறியப்படும் ஒரு நிலையற்ற படுக்கையாகும். சூழ்நிலையால் வறுமையும், ஆறுதலளிக்கப்படாமல் துன்புறும் மனநிலையும் அடையப்பெற்ற ஒருவனுக்கு வாழ்க்கைப்படுக்கை - சலனம் நிரம்பிய சுருள்களால் ஆன மஞ்சமாகவும் விரிக்கப்படுகிறது. அதனால் அந்த அபாக்கியவான் வாழ்வும் சலனம் நிரம்பி நிம்மதியற்று விளங்குகிறது,

வாழ்க்கையென்பது சிமெண்டுப்போட்ட சாலையல்ல, உண்டு உறங்குவதற்கான சத்திர வாசலல்ல; கண்களைக் குளிர வைக்கும் தாஜ்மகாலல்ல. அஃது ஒழுக்கநெருப்பு. சேவைப் பம்பரம், முடிவு பெறவேண்டிய ஓவியம், போற்றப்படவேண்டிய பொன்மொழிகள், தியாகம் செய்யப்படவேண்டிய

அன்பு. அஃது உறுதியுடன் வானளாவி நிற்கவேண்டிய பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம். இவை யாவற்றையும் எண்ணுது மறந்துவிட்டு வாழ்வில் ஓய்வுவேண்டும் என்பவன் நோயாளி. சந்தர்ப்பம் கிட்டவில்லையே என்று ஏங்குபவன் சோம்பேறி. தோல்வியினுல் சோர்வடைபவன் கோழை, பிறர் சொல்லுக்குப்பயந்து தன் செயலை மறப்பவன் இருந்தும் இறந்தவன். கடமையை செலுத்த முன்வந்து, சமூகத்தின் எல்லாக் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு சேவை செய்பவன் தியாகி எனப்படுகிறுன். இத்தன்மையதான அசைக்க முடியாத சக்தி இன்றையவுலகில், அண்ணல் மகாத்மா, மாட்சி மிக்க நேரு, காலஞ்சென்ற இரும்புப்பிடி படேல், தீர்க்கதரிசி ராஜாஜிபோன்ற ஒப்பற்ற தலைவர்களுக்கே உண்டு. இவர்கள் வாழ்வில் வெற்றிகண்ட மேதைகள், உலகம்போற்றும் உத்தமர்கள்.

இனி, எது? சதா சலித்துக்கொண்டிருக்கிறதோ, எது? ஆழ்கடல் அலைகள்போல் அலைந்துகொண்டிருக்கிறதோ அதுவே வாழ்க்கை. வாழ்வில் நிம்மதிகாண இயலாமல், நிறைவு ஏற்படாமல் ஏங்கிக்கொண்டிருப்பதே போராட்டம் எனப்படுகிறது. இந்த வரையறுக்கப்படாத முடிவற்ற போராட்டமே மனிதனை ஆட்டுவிக்கின்றது. பணக்காரனைக் கண்டு ஏழை அழுக்காறு கொள்வதைவிடத் தன்னினும் கீழானவனை எண்ணி நிம்மதி அடையாமல் தனக்குத்தான் உண்டாக்கிக் கொள்ளும் போராட்டமே வாழ்க்கை? ஆனுல் இதை 'வாழ்க்கைப் போராட்டம்' என்று கூறுவதைவிடப் பாவைக்கூத்து வாழ்க்கை என்று எளிதாகக் கூறிவிடலாம். அவ்வாறெனில் உண்மையான வாழ்க்கை என்பது யாது?

சலனம் நிரம்பிய வாழ்விலிருந்து சிந்தனைச் சுடர் தெறிக்க வேண்டும். செயல்கள் உருவடைய வேண்டும். சிந்தனை செய்யாத மனமும் செயலாற்றுத வாழ்வும் சவக் குழியில் சரண்புகத் தக்கவை. இனி, சிந்தனை என்பது என்ன? கண்ணுல் காணமுடியாது! கையினுல் பற்ற முடியாது! ஆயினும் அது மனிதனின் மனத்திரையைத் தன் கைகளினுல்

 5 ??

பற்றிக்கொள்கிறது. ஆகவேதான் உலகில், பக்தர்கள் என்றும் பரமனைச் சிந்திக்கிருர்கள், பணம் பெற்றவர் தங்களது சிறப்புள்ள வாழ்க்கையின் உயர்வைப்பற்றிச் சிந்திக்கிருர்; ஏழை பணத்தைப்பற்றி உருவை உருவாக்குகிருன். அறிஞன் விஞ்ஞானத்தின் விளைவை எண்ணுகிருன். நோயாளி சதா சாவைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிருன். தாய் தனது குழந்தைகளின் சுகவாழ்வைப்பற்றித் திட்டமிடுகிருள். கணவன் மனைவியையும், எழுத்தாளன் தன் மேதாவிலாசத்தையும், குரு தன் மாணுக்கர்களையும் ஓவியன் தன் சித்திர சிற்பங்களையும், அதிகாரி தன் அலுவலக விஷயங்களையும் பற்றியுமே சதா சிந்திக்கின்ருர்கள். இதுவே சிந்தனை எனப்படும்.

இனிச் செயல் என்பதைப்பற்றி ஆராய்வோம். **செயல்:** தன் சக்திக்கு மீறி, உதவி செய்யவேண்டும் என்று நினைத்து, **செயலாற்றுவது** இரக்கப்பட வேண்டியதாகும். கடமைகள் நிரம்பி இருக்கையில் தன் **செயலால்** பெருமையடைய நினைப்பது இழிச்செயல் என்ப; சமூகத்தில் தனக்குள்ள பேதங்களை அறிந்து அடக்கத்துடன் பிறர்க்கு உதவி புரிவது போற்றப்படவேண்டிய **செயலாகும்**. பிறரது உதவிகளைப் பெற்று நன்றி காட்டாதிருப்பது பகுத்தறிவற்ற **செயலைச்** சார்ந்ததாகும். வாழ்க்கை என்பது சர்க்கரைப் பாகும் உவர்நீரும் கலந்து மாறிமாறி வழங்கப்படும் உணவு வகைக்கொப்பானது. அதுபோல் இன்பமும் துன்பமும் கலந்து வருவதே வாழ்வாகும். பகுத்தறிவுவாய்ந்த நமக்கு இன்பத்தைப்போலத் துன்பம் உணரப்படுவதில்லை ஏன்? வெறுக்கப்படுகிறதென்றே வைத்துக்கொள்ளலாம். காரணம் இன்பம், அன்றலர்ந்த தாமரைபோலவும், துன்பம் மழையில் நனைந்து உலர்ந்த சருகைப்பேலவும் மக்கள் மனத்தை மாற்றி விடுவதினுல்தான்! மனிதன் விழவிரும்புவானே யன்றிச் சாகத் துணியமாட்டான். ஆனுல் விழ இடமில்லாதவனுக்குச் சாவும் அமிர்தமாக இனித்துவிடுகிறது. லட்சியப் பார்வையுள்ளவன் பிறர் வாழக்கண்டு இன்பமடைவானேயன்றிப், பிறர் சாக இசையமாட்டான். லட்சியம் என்பது யாதாயிருக்கும்?

வாழ்வில் மனிதன் தன் மனத்திற்கு இன்பம் அளிக்கும் பொருளை எண்ணி அதனை நாடி அடைவதிலேயே தன் தன் இலட்சிய சிகரத்தை எட்டிப் பிடிக்கிறான். ஆனால் அதற்குள் அவன் படும்பாடு? சமூகம் என்பது ஒரு முள்வேலி, அதில் அவனது லட்சியம் என்பது வேலியில் சிக்கிய, உயர்ந்த பட்டாடை, அதனைப் பொறுமையாக, நிதானத்துடன் மெதுவாக விலக்கி மீட்டுக்கொள்பவன் சமூகத்தின்முன் நல்லவனாகிவிடுகிறான். அலட்சியத்தோடு ஆடையைக் கிழித்து வேலியினின்று விலக்கிக்கொள்பவன் சமூகத்தை எதிர்க்கும் பலமுடையவனாகிறான். வேலிக்குப்பயந்து ஆடையை விட்டு ஓடுபவன் சமூகக்கோழையாக ஏளனம் செய்யப்படுகிறான்; வேலியை அடியோடு அசைத்து, சின்ன பின்னமாக்கி சமூகத் தின்முன் தன் இலட்சியத்தை அடைபவன் பெரு மூடனாக விளங்குகிறான். இவனைக்கண்டு உலகம் அஞ்சுகிறது இவ்வாறு போராடி இலட்சிய சிகரத்தை எட்டிப் பிடிப்பதில் தான், வாழ்வு பூரணமடைகிறது.

வாழ்க்கை வண்டியின் இரண்டு சகடங்கள் அன்பும்' அஞ்சாமையும் ஆகும். லட்சியப்பாதையில் இவ்வண்டி ஓடுகை யில், மணல் நிரப்பிய முச்சந்தி ஓட்டத்தைத் தடைசெய்கிறது. அதுவே கவலை. இந்த நிலையில் அதனைத்தாங்கி நிறுத்தி வைக்கும் அச்சாணி பற்றின்மை என்பதாகிறது. பற்றின்மை உள்ளவர்கள் முற்றும் துறந்த துறவிகளாகி, வாழ்வுப் போராட்டத்தை நிறுத்தி, இறைவனை எண்ணி அமைதி யடைகின்றனர். அன்பினால் உலகை வெல்கின்றனர். அஞ் சாமையினால் இன்னல் தரும் வாழ்வுப் போராட்டத்தில் வெற்றி காண்கின்றனர். நிற்க வாழ்க்கையின் முக்கிய சகடமான அன்பு என்பது என்ன? இதற்குப் பொருள்காண உலக அகராதியைத் தேடிப்போக முடியுமா? நம்வரை இது பலவகைப்படும், தாயன்பு, சேயன்பு, சகோதர அன்பு, குடி களிடம் காட்டும் அன்பு, தாய்நாட்டு அன்பு, இறையன்பு, **தாயன்பு:** அன்பிற் சிறந்தது. அன்பின் சிகரம். **சேயன்பு, சகோதர அன்பு:** இவை துல்லியமான இரத்தப்பாச அன்பு. **குடிகளிடம் காட்டும் அன்பு:** இரக்கம் நிரம்பிய கடமை

யன்பு. **தாய்நாட்டு அன்பு:** ஸ்வதந்திரதாகம் நிரம்பிய புரட்சி அன்பு. **இறையன்பு:** தெய்விகமான தூரிய அன்பு. ஆகவே அன்பின் உண்மைப்பொருளை ஆராய்தல் கடினம். பொதுவில் பிறருக்காகத் தன் உள்ளத்தைத் திறந்து உதவ வைக்கச்செய்யும் தாழ்ப்பாளே அன்பு. தான் வாழ, பிற நலிந்த உள்ளங்களைச் சிதற அடிக்காது வாழ விரும்புவதே அன்பு.

பெண்களது வாழ்வு அவர்களது அகவளர்ச்சியின் அடிப்படையில் எழும்புவதொன்றாகும். அவர்களது அக வளர்ச்சியைப்பற்றி ஆராய்வோம். வாழ்க்கை என்பது அவர்களது உள்ளத்தினின்று பிரதிபலிக்கும் சலனம் வாய்ந்த நிழற்படமாகும். பகுத்தறிவுள்ள ஒரு பெண்ணின் உள்ளம் வயிரம் பாயப்பெற்ற நல்லவகை மரத்திற்கு ஒப்பானது. மரங்கள் சாதாரணமாக, புயலினால் தாக்கப்படுகின்றன. அது போல் மேற்கூறிய பெண்ணின் மனமும் பலவித உணர்ச்சிப் புயல்களினால் தாக்கப்படுகிறது. அக வளர்ச்சியற்ற பெண் எளிதில் புயலில் சிக்குண்டு சின்னபின்ன மடைகிறாள். ஆனால் வயிரம் பாய்ந்த உள்ளமுள்ள பெண்ணோ புயலின் கொடுமையை இறைபணி, சமூகசேவை, கல்வி பேணல் போன்ற விழுதுகளினால் ஊன்றிக்கொண்டு புயலி னின்று சேதப்படாது வெளியேறுகிறாள். ஆகவே காட்டி லுள்ள எல்லாவகை மரங்களும், உலகத்திலுள்ள எல்லா வகைப் பெண்களின் உள்ளங்களும் அதேபோல் புயலினால் தாக்கப்படுவது மட்டும் உண்மை. திடசித்தமே அகவளர்ச்சி யாகும். புறத்தோற்றத்தினால் அவர்களது அகவளர்ச்சியைக் கணக்கிடுவது தவறு. அன்பு என்பது சிவன். கடமை என்பது சக்தி, ஒருசெயலில் இறங்குகையில் சக்தியே வெற்றி பெறுகிறாள். ஆனால் சிவனது நினைவுத் துணையினால்தான். ஆகவே அன்பும் கடமையும் ஒரே நுகத்தடியில் கட்டப்பட் டுள்ள இரு காளைகளாகும்.

வாழ்வானது சீலம் நிறைந்து, கண்யமானமுறையில் நடக்க வேண்டுமென்று அனுதினமும் ஈசனை வேண்டுவதோடு

அன்றாடம் வாழ்வில் இழைக்கப்பட்ட தவறுகளையும் தவறு செய்ய எண்ணிய நினைவுகளையும் கூடியவரை விலக்கி, வாழ்க்கையைச் செம்மையான அலைகளற்ற கடலில் ஓட்டிச் செல்ல முயலவேண்டும். தான் என்னும் நற்காரியத்தைச் செயலில்காட்டி, தான் கடைப்பிடித்த வாழ்வைப் பிறருக்கு எடுத்துரைத்து, பிறரிடம் கூறியபடியே தன் வாழ்வையும் செப்பமுற நடத்தி, அந்த நல்வாழ்வை வெறும் ஏடுகளி லல்லாது, உள்ள பொன் ஏட்டில் பொறித்து வைத்துப் போற்றுவதே வாழ்க்கையின் நடுநிலை ஆராய்ச்சிப் பயனாகும்.

"வாழ்வின் – வாழ்க்கையின் – உயர்ந்த சிகரம் இறைவ னின் பாததரிசனமே! இன்பமே அதன் எல்லை, ஆனாலும் துன்பப் பறவையின் நிழல் இன்பத்தின் எல்லைவரை படிந் திருக்கிறது. ஆதலால் துன்பவெப்பத்தில்தான் இன்ப நிழலின் சக்தியை உணரமுடியும். இவ்விதம் நாம் பாடுபட்டு அடைய விரும்பும் இன்பமே சிறந்த இன்பம். அது என்ன? அஃதே இறைபணி படிந்த, தூய **சிவபக்தியாகும்!** சிவபக்தி ஒன்றினால்தான் வாழ்வில் மனிதன் தன் தலையில் துன்பப் பறவை கூடுகட்டுவதைத் தவிர்க்கமுடியும்.

வாழ்க்கை என்னும் பூத்தொட்டியில் **செல்வம்** என்னும் **உரம்** நிரப்பப்பட்டுளது. அதனுதவியால் செழிப்புடன் வளரும் **இன்பச்செடிகள், மகிழ்ச்சி, சாந்தி** என்னும் மலர்களை மிளிர்விக்கின்றன. ஆனால் சிலரது வாழ்வுத் தொட்டிகளோ எரு இன்றியே **வறுமை, துன்பம்** என்னும் மணற்றுகள்கள் உதவியால் தன் முயற்சியோடு வளர்ந்து வருகின்றன. ஆனால் **சமூகம்** என்னும் குழந்தை **அவதூறு** என்னும் கொதிநீரை, வாழ்க்கைத் தொட்டியில் ஊற்றி விடுகிறது. மலரத் துடிக்கும் **அமைதி** மலர் மொட்டுகள் இதனால் கருகிவிடுகின்றன. மீண்டும் இச்செடிகள் தளிர்த்து வளர உதவும் ஒரே ஒரு சாதனம் **இறையன்பு** என்னும் என்னும் மழைநீரேயாகும்.

---

# கள்வன் மகன்

வித்துவான், ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்
சீகாழி தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

**இது கலித்தொகைப் பாட்டுஒன்றன் விளக்கம், படித்துச் சுவைத்தற் குரியது.**

பூர்ண அழகுபெற்ற தொன்று தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கின்றது. தெருவில் மணலைத் தெள்ளி நுண்ணிய மணலாக எடுத்து அதைவைத்துச் சிறுவீடு கட்டி விளையாடு கின்றது. அதுவும் சிறிது. அதுகட்டும் வீடும் சிறிது. பின்னல் பெரியபெண்ணுய் ஒருவனை மணந்து வாழ்க்கை நடத்தவேண்டியவள்தானே? அப்போது, வீட்டின் எஜமானி யாக அவள் வீட்டை ஒழுங்குபட வைத்துக்கொள்ளவேண்டு மல்லவா? அதற்காக இப்போதுமுதலே பழகிக்கொள்வது நல்லதுதானே?

இப்படி இவள் விளையாடிக்கொண்டிருப்பதைத் தூரத் திலிருந்து கண்ட மிடுக்குள்ள சிறுவன் ஒருவன் நேரே அவ்விடம் விரைந்துவருகிறுன். அவன் முகத்தில் மகிழ்ச்சி யோடு குறும்பும் தோன்றுகிறது. அவளிடம் குறும்பு செய்வதில் அவனுக்குத்தான் என்ன மகிழ்ச்சி? தவிர, அவ் விதம் செய்ய அவனுக்கு ஏதோ உரிமையும் இருப்பதுபோல் தோன்றுகிறது. இல்லாவிடில், அவள் அழகாக ஒழுங்குபடக் கட்டிய வீட்டை அவன் தன் காலால் அழிப்பானு?

எவனே ஒரு துஷ்டன், தான் தன் முதுகுநோக இருந்து இழைத்த சிறு வீட்டைக் காலினுல் அழிப்பதைக்கண்ட சிறுமி அண்ணந்து பார்த்து "யார் இவ்வம்பு செய்தவன்?" என்று பார்க்கிறுள். வாயார அவனை வைதல்வேண்டும் என்பது அவள் பூர்ண அவா. ஆனுல் அழித்த சிறுவன் முகத்தைக் கண்டதும், அவனைவைய வாயில்வந்த மொழி களை அப்படியே விழுங்கிக்கொள்கிறுள். உள்ளேமட்டும் கொஞ்சம் வருத்தந்தான். இவன் தன்னிடம் இப்படி நடந்து கொள்ளலாமா என்று ஒன்றும் பேசாதவளாய் நாணித் தலை குனிந்துகொள்கிறுள்.

582



ஆனால், சிறுவன் மனத்திலோ உற்சாகம் மென்மேலும் பெருகுகிறது. தலைகுனிந்து இருந்த சிறுமியின், அழகிய பின்னலில் செருகியிருந்த புஷ்பத்தை ஒருகையால் பிய்க்கிறான்; மற்றொருகையால் சிறுமியின் கையிலுள்ள அழகிய பந்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடுகின்றான். அவளால் அவனை ஓடிப் பிடித்துத் தன் பந்தைப் பிடுங்கமுடியுமா? "இது என்ன பட்டித்தனம் பார்த்தாயா? அவிழ்த்துவிட்ட காளைபோல் கொழுப்புடன் இவன் திரிவதைப் பாரடி!" என்று தோழியிடம் சொல்லிக்கொண்டுநிற்கிறாள் சிறுமி.

இப்படி ஒருநாள் அல்ல; எந்நாளும் இதுபோலவே அவர்கள் விளையாட்டு நிகழ்ந்தது. சிறுவன் சிறுமி இருவரும் இவ்விளையாட்டிலேயே ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்து கொள்கிறார்கள். அவர்களை அறியாமலேயே இருவர் மனத்திலும் அன்புநிறைகின்றது. அன்பும் காதலின் அரும்பு தானே!

காலச்சக்கரம் சுழலுகின்றது. சிறுவன் வாலிபனாய் விட்டான். சிறுமியும் யௌவன மங்கையானாள். அவர்கள் உள்ளத்தே தோன்றியிருந்த அன்பென்னும் அரும்பும், காதல் என்னும் மலராக மலர்கிறது. அவள் யுவதியாய்விட்டபடியால் முன்போல் தெருவில் அடிக்கடி விளையாடவருவதில்லை. ஆகவே இருவரும் முன்போல் அடிக்கடி சந்திக்கவும் இயலாமற்போயிற்று. அப்படிச் சந்தித்தாலும் யாரேனும் இருப்பின் முன்போல் தாராளமாய்ப் பேசிக்கொள்ள அவர்களிடையில் நாணம் தடையாயிருந்தது. ஒருசமயம் அவர்கள் இருவரும் சிலநாளாகவே சந்திக்க முடியவில்லை.

வாலிபனுக்கு எப்படியாவது அவளைச் சிறிதுநேரமாவது கண்டு உரையாடி வரவேண்டும் என்று துடிப்பு. ஆனால், எவ்விதம் அவளைக் காணுவது? அவளோ வீட்டினுள்ளேயே எப்போதும் இருக்கிறாள். அப்படியாவது தனியாய் இருக்கிறாளா? தாய்தான் வீட்டில் எப்போதும் கூடவே இருக்கின்றாளே? எனினும் தாயறியாமல் அவளைத் தனியாகக் கண்டு பேச ஓர் உபாயத்தை அவன் மனத்தில் தீர்மானம்செய்கிறான். நேரே போகிறான் அவள்வீட்டுக்கு.

அவளோ ('தலைவி' என்று இனி அழைப்போம்) தாயுடன் வீட்டின் உள்கட்டில் இருக்கிறாள். வாலிபன் (அவனை இனி 'தலைவன்' என்று அழைப்போம்) அங்கு சென்றவன் வீட்டுத் திண்ணையில் வாசலுக்கு எதிரின்றிச் சற்று விலகி உட்காருகிறான். மிகவும் களைப்புற்றவன்போல (உண்மையில் தலைவியைக் காணவேண்டும் என்ற தாபத்தால் களைத்தவன்தான்). 'அம்மா! தாகமாக இருக்கிறது. குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்' என்று கூவுகிறான். அவன் மனம் பக்குப்பக்கென்று அடித்துக்கொள்கிறது. தாய் மகளைத்தான் தண்ணீர்கொடுக்க அனுப்புவாள் என்ற ஒரே நம்பிக்கையோடு தான்தீர்மானித்த உபாயத்தைப் பிரயோகம் செய்தாயிற்று. ஆனால் தண்ணீர்கொண்டுவருபவள் தாயானால்?

அவன் கவலை சற்றுநேரமே, வீட்டினுள்ளே 'அம்மா! வெளியே யாரோ தண்ணீர்கேட்கிறார்கள். அந்தப்பொன் வட்டிலிலே தண்ணீர் கொண்டுபோய்க்கொடு' என்று தாய் மகளிடம் கூறியது அவனுக்கு நன்றாய்க்கேட்டது. அவ் வார்த்தைகள் வெதும்பிக்கொண்டிருந்த அவன் மனத்தில் பால்வார்த்தாற்போன்று இருந்தன.

உள்ளிருந்து பொற்கிண்ணத்தில் ஜலத்துடன் வருகிறாள் தலைவி. அவளுக்குத் தண்ணீர்கேட்டவன் தலைவன் என்பது எப்படித் தெரியும்? 'இந்தாங்க தண்ணீர்' என்று கிண்ணத்துடன் கையை நீட்டிக்கொண்டே திண்ணையில் திரும்புகின்றாள். தலைவன் தண்ணீருக்காகவா அங்குவந்தான்? எப்போது அவள்வருவாள் என்ற ஆத்திரத்தோடு இருந்தவன் கிண்ணத்தை வாங்காமல், எட்டி வளையல்கள் செறிந்த அவள்கையைப்பற்றித் தன்னிடம் இழுத்தான். தனித்து வந்த தன் காதலியிடம் அவனுக்கு நாணம் ஏது? முன் அவன் தொட்டுப்பயின்ற பெண்தானே அவள்?

திடீரென்று அவன்செய்த எதிர்பாராத செயலால் தலைவி மனம் பதறியவளாய் அந்த அவசரத்தில் "அம்மா! இவன் செய்ததைப்பாரடி!" என்று கூவிவிட்டாள். அடுத்தகணத்தில் தன்னையே நொந்துகொண்டாள். அவனைக்காணமுடியாமல்

ஏங்கிக்கொண்டிருந்த தான் இப்படி அவனை முகர்முறித்தாற் போல் கூவினது சரியல்ல என்று உணர்கிறான். உணர்ந்து என்ன பிரயோஜனம்? கூவினவார்த்தைகளைத் திருப்பிக் கொள்ள முடியுமா? அல்லது அவள்தான் அவ்வார்த்தைகளை மெதுவாகக்கூறினாளா தாய்காதில் அவைவிழாமலிருப்பதற்கு? அவள் கூவினதைக் கேட்டுத் தாய் உள்ளேயிருந்து விரைவாக வரும் சப்தமும் அதோகேட்கிறது.

தலைவன் மனமோ ஊஞ்சலாடுகிறது. தலைவிக்கு உண்மையில் தன்னிடம் காதல்தான் என்று அவன் அறிவான். ஆகவே அவள் தன்னைக்காட்டிக்கொண்டாள் என்று நிச்சயம் கொள்கிறான். ஆனால் அவளுக்கு அவனிடம் அவ்வளவு அன்பு, அவன் அவளிடம் கொண்டுள்ளதுபோன்ற அன்பு உண்மையில் இருந்தால் பின் எதற்காக அவள் அவ்வாறு கூப்பாடு போடவேண்டும் என்ற சந்தேகமும் அவன் மனதில் தோன்றுகிறது. ஆகவே தலைவி விட்டபடி விடட்டும் என்று தலைகுனிந்து இருந்துவிடுகின்றான்.

அவன் மனநிலையைக்கண்ட தலைவிக்கோ மிகவும் மனக் கலக்கம். ஆனால் நடந்தது நடந்தாயிற்று. தாய் வருகிறாள். வந்து என்ன நடந்தது? என்று கேட்பாளே! என்ன சொல்லி நடந்ததை மறைத்துத் தன் காதலனைக் காட்டிக் கொடாமல், தாயின் மனத்திலும் சந்தேகம் ஏற்படாமல் நிலைமையைச் சமாளிக்கலாம் என்று அவள் மனம் வெகு வேகமாக எண்ணமிடுகிறது. சட்டென்று ஒரு முடிவுக்கு வருகிறாள். அடுத்த கணம் தாயும் மகளுக்கு என்ன நேர்ந்ததோ என்று மனம் பதறியவளாய் அலறிப்புடைத்துக் கொண்டு வந்து சேருகிறாள்.

"என்னடி? எதற்காகக் கூச்சல் போட்டாய்? என்னடி நடந்தது?" என்று மகளையும் தலைவனையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டே கேட்கிறாள் தாய். மகளோ, முகத்தில் பயத்தை வருவித்துக்கொண்டு, 'அம்மா! நான் தண்ணீர் கொடுத்தேன். வாங்கி உண்ணுகையில் இவன் தொண்டை யில் திடீரென்று விக்கிக்கொண்டு மிகவும் சிரமப்பட்டான்.

நான் பயந்துவிட்டேன். எனக்கு என்ன செய்வது?" என்று தெரியவில்லை. நான் உன்னைக் கூப்பிடாமல் அந்த நிலையில் வேறென்னம்மா செய்வது?" என்று மிகுந்த பரிவுடன் கூறுகிருள்.

இதைக்கேட்ட தாய்க்கு மகளிடத்தில் பூரண நம்பிக்கை. விருந்தினன் ஒருவன் பட்ட கஷ்டத்தில் தன் மகள் மனம் இரங்கினுள் என்று அவளுக்குத் திருப்தி. தலைவனிடம் கழிவிரக்கம் தன் வீட்டில் தண்ணீர் உண்டு, அங்கே விக்கிச் சிரமப்பட்டான் என்று உடனே அவள் பின்னுல் அமர்ந்து அவன் முதுகைத் தடவிக் கொடுத்துச் சிரம பரிகாரம் செய்கிருள்.

தலைவி, முன்னே சற்று விலகி நிற்கிருள். தலைவன் தலைவி கண்கள் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன. பின்னுல் தாய் இருக்கையிலேயே தங்கள் உள்ளக் கிடக்கைகளைக் கண்பார்வைகளாலேயே வெளியிட்டுக்கொள்கிருர்கள்.

தலைவன் முதலில் பார்த்த பார்வை தலைவியை அப்படியே கொன்றுவிடுவது போன்றிருக்கிறது. அதில் அவ்வளவு கோபம் தோன்றுகிறது. அவளோடு சற்றுவது தணித்து அளவளாவலாம் என்றெண்ணி ஓர் உபாயத்தைத் தீர் மானித்து வந்தவனுக்கு அவ்வுபாயம் வந்தும் அதன் பலனை அவன் அடையாமல் தலைவி தாயைக் கூப்பிட்டுக் காரியம் முழுவதும் கெடுத்து விட்டானே என்று கோபந்தான். ஆனுல் அப்பார்வை கணநேரம் மட்டுமே.

உடனே அவன் பார்வைகளில் எத்தனை எத்தனை வகையான உணர்ச்சிகள் அலைமோதிக்கொண்டு வருகின்றன? தன்னை அவளும் காதலிக்கிருள் என்ற திருப்தி. தன்னை அன்னையிடம் காட்டிக் கொடாமல் நிலைமையைச் சமாளித் ததில் அவளிடம் நன்றி. அவள் சமயோசிதபுத்தியை மெச்சும் மகிழ்ச்சி. அவளைத் திடீர் என்று பற்றி அவளைப் பதறவைத்தமைக்குப் பச்சாத்தாபம். அவள் மன்னிப்பைக் கோரும் பிரார்த்தனை. இவை எல்லாவற்றுக்கும் மேலாகப்

பரம நம்பிக்கையோடு தாய் தங்களிடம் எவ்வித சந்தேகமும் கொள்ளாது தன் முதுகைத் தடவிக்கொண்டிருப்பதில் ஓர் நகைப்பு இன்னும் காதலர்களிடையே தோன்றும் வித விதமான மனோபாவங்கள். இருவர் மனம் மகிழ்ச்சியாய் நிறைந்து லயிக்கின்றன. சற்று நேரத்தில் தலைவன் விடை பெற்றுச் செல்கின்றான்.

அத்தகைய நாளைத் தலைவி என்றும் மறக்கவில்லை. தலைவியின் உள்ளத்தே மேற்கண்ட நிகழ்ச்சி என்றும் பசச்சென்று வளம் பெற்றிருக்கின்றது. வெகுகாலத்திற்குப் பிறகு தன் தோழியுடன் அவள் ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையில் இச்சம்பவத்தை எவ்வளவு உற்சாகத்தோடு கூறுகிறாள்.

சுடர்த்தொடீ! கேளாய்; "தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காதில் சிதையா, அடைச்சில
கோதை பரிந்து வரிப்பந்து கொண்(டு) ஓடி
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்நாள்,
என்னையும் யானும் இருந்தேமா, "இல்லீரே"!
உண்ணும் நீர் வேட்டேன்" என வந்தாற்கு, அன்னை
சுடர் பொற் சிரகத்தால் வாக்கி, "சுடர் இழாய்!
உண்ணும் நீர் ஊட்டிவா, என்றாள் என யானும்
தன்னை யறியாது சென்றேன் மற்(று) என்னை
வளை முன்கைபற்றி நலிய, தெருமந்திட்டு,
"அன்னாய்! இவனொருவன் செய்தது காண்" என்றேனா,
அன்னை அலறிப் படர்தர தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்(பு) அழித்து நீவ, மற்(று) என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக் கூட்டம்
செய்தான் அக் "கள்வன் மகன்".

—கலித்தொகை குறிஞ்சி.

இத்தகைய சம்பவத்தை மகிழ்ச்சியுடன் தோழிக்குக் கூறும் தலைவி, தலைவனைக் "**கள்வன் மகன்**" என்று கூறுவதில் உள்ள பூர்ண வாஞ்சையைப் பாருங்கள்!

---

587.

# ஆதீனத்திலும், ஆதீன தேவஸ்தானங்களிலும்

## நீதிபதியின் விஜயம்

2—7—54 வெள்ளிக்கிழமை யன்று காலை சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ பி. கோவிந்தமேனன் தருமபுரத்துக்கு விஜயம்செய்தார். துர்க்காதேவி ஆலயத்தில் சென்று வழிபாடாற்றி, ஆதீனத் தமிழ்க் கல்லூரியையும், உயர்தர ஆரம்பப் பாடசாலையையும் பார்வையிட்டார். பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களைத் தரிசித்தார். பல்கலைக் கல்லூரியைப் பார்வையிட்டுப் பார்வையாளர் புத்தகத்தில்,

'நாட்டின் நலனுக்கு இந்து கலாசாரம், சமயம் ஆகியவை வளர்ச்சி அடைய வேண்டுவது இன்றியமையாதது. நாஸ்திகம் தனது குரூரமான தலையைக் காட்டும்படியான இந்நாளில் தருமபுரம் ஓரியண்டல் கல்லூரிபோன்ற ஸ்தாபனங்கள் ஹிந்து கலாசாரம் சமயம் ஆகியவற்றுக்குப் பெரும் சேவைபுரிந்து வருகிறது. தமிழும் சமஸ்கிருதமும் கற்பிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். கல்லூரி வெற்றியும் செழிப்பும் அடைவதாக.

என்று எழுதினர். ஸ்ரீ கோவிந்தமேனன் அவர்கள் விஜயம் செய்து அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தச்செய்தது குறிப்பிடத்தக்கது.

## வித்துவான் தேர்வில் எல்லோரும் வெற்றி

ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் 54 மார்ச்சில் நிகழ்ந்த அரசியல் தேர்வில் ஆஜரான இறுதிநிலை மாணவர்கள் 16 பேரும் தேறினர். தக்கமுறையில் தேறியுள்ளார். வித்துவான், முதனிலைக்குச் சென்ற 25 பேரில் 4 பேர்நீங்க மற்றவர் மாண்புடன் தேறினர். எவ்வாண்டும்போலவே இவ்வாண்டும் இக் கல்லூரி மாணவர்கள் அடைந்த வெற்றி கல்லூரிப் பேராசிரியர்களின் ஓயாத உழைப்பையும் அவ்வுழைப்பு அளித்த உயர்ந்த பரிசையும் குறிக்கிறது என்றால் அது மிகையாகாது.

## சீகாழியில்

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழிச் சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில், திருநிலை நாயகி அம்பாளுக்கு மாயூரம் A. R. C. & சன்ஸ் அவர்கள் புண்ணியச் செயலாக நூதனமாகச் செய்யப்பட்டிருக்கும் நாற்பத்து முக்கோண ஸ்ரீசக்ரதாடங்கம் 2—7—54 வெள்ளிக்கிழமை யன்று சார்த்தப்பட்டது. விசேஷ அபிஷேகம் சந்தனக் காப்பு நவசக்தி அர்ச்சனை முதலியன நிகழ்ந்தன. அவ்வமயம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆராய்ச்சித் தலைவர் வித்துவான், திரு. G. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் 'அம்மை அருள்' என்ற தலைப்பில் அருமையான சொற்பொழி வாற்றினார்கள் சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்து தரிசித்து, திருவருள் பெற்றுய்ந்தார்கள்.

## தில்லையில்

தோத்திரசாத்திரக் கல்வெட்டுத் திறப்புவிழா:—தில்லைச் சபாநாயகர் திருக்கோவிலில் தோத்திர சாத்திரக் கல்வெட்டுகள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் அருளாணைப்படி வெட்டப்பட்டுள்ளன. 11—7—54 ஞாயிறன்று இதனை சென்னை ராஜ்ய கல்வி யமைச்சர் C. சுப்பிரமணியம் அவர்கள் திறந்துவைத்துச் சொற்பெருக்காற்றுவார்கள்.

## சென்னை, சிவனடியார் திருக்கூட்டம்

புலவர் திரு. இளவழகனார் தலைமையில் 200-க்குமேற்பட்ட சிவனடியார் பெருமக்கள் நிரம்பிய இத்திருக்கூட்டம் தருமபுரத்துக்கு விஜயம்செய்தது. ஆணும் பெண்ணும் குழவியுமாக இருந்த அனைவருக்கும் ஸ்ரீ-ல ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தரிசனம் தந்தது மட்டுமன்றி அருள் நிரம்பிய கருத்துரைகளையும் அருளினார்கள். சிவனடியார் அனைவரும் ஆதீன தேவஸ்தானங்களில் சென்று வழிபாடாற்றுவதற்கு ஆதீனத்து மோட்டார் வான்கள் உபயோகிக்கப்பெற்றன. அடியார்களுக்கு எண்ணெய் முழுக்குக்கு எண்ணெய் தரப்பட்டது. ஆதீனச்சார்பில் அனைவருக்கும் உண்டி அளிக்கப்பெற்றது. சிவனடியார் பெருமக்கள் - கதிவாழ - ஆகமம்வாழ - கண்மணியும் சிவமும்வாழச் சுற்றுப் பிரயாணம்செய்து தொண்டு புரிந்து வருவதைத் தமிழுலகம் மிக மிகப் பாராட்டுகிறது.

584.

# சென்னை, தருமபுர ஆதீன
# மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்
## வேளூர் தேவஸ்தான இறைபணி மன்ற

# நிகழ்ச்சிகள்

**இலவச தமிழ் வித்துவான் வகுப்புத் தொடக்கவிழா**

தமிழ் வித்துவான் பகுதியில் புகுமுகம் இசைநிலை, இறுதிநிலை வகுப்புக்களில் தேர்ச்சிபெற விரும்புவோர்கட்கு இவ்வகுப்புத் தொடங்கப்பெறுகிறது. மூன்ருண்டு ஆசிரியப் பயிற்சியுடைய வர்களும், 30 வயதானவர்களும் படித்துத்தேர்வெதே இவ் வகுப்பு வாய்ப்பளிக்கிறது. 21—6—54 திங்கட்கிழமை மாலை 6-மணிக்குத் துவக்கவிழா ஆரம்பமாகிறது. சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் கடவுள்வணக்கம் பாடினூர்கள் வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் அனைவரையும் வரவேற்ருர்கள். பல்கலைச்செல்வர், திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் M.A., B.L., M.O.L., அவர்கள் "அகர முதல எழுத் தெல்லாம்ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற திருக்குறளை முதலாகக்கொண்டு வகுப்பினைத் தொடங்கி வைத்தார்கள். தமிழ்மொழியில் நாத்திகத்திற்கு இடமில்லை என்பதனை வள்ளு வர் முதற்குறளிலேயே அறிவித்துவிட்டார், அதுவும் உவமான முகத்தால் கடவுளைச் சிறப்பித்துப் பேசுகிருர். தமிழ் மொழியை தமிழ்நாட்டு மூவேந்தரும் பாதுகாத்து வந்தனர். அதன்பின் ஒரு சில சிற்றரசர்கள் போற்றி வந்துள்ளனர், அரசர்கள் ஆதரவு அகன்றகாலத்தில் மடாதிபதிகள்தான் தமிழைப் போற்றி வளர்த்துவந்தனர். குமரகுருபரர், வெள்ளி யம்பலவாண முனிவர், சிவஞான முனிவர், ஆறுமுகத்தம்பிரான் போன்ற திருக்கூட்டத்து அடியவர்கள் சிறந்த நூலைத் தமிழகத்துக்கு ஆக்கித்தந்தனர். தமிழ்மொழியில் என்ன இருக்கிறது? என்று கேட்டவர்கள் இவ்வகுப்பில் கலந்து படித்தால் நன்கு விளங்கும். இவ்வகுப்பினைத் தொடங்க முன் வந்த மகாசந்நிதானமவர்களை மனமார வாழ்த்துகிறேன் என்று தமது துவக்க உரையில் அறிவித்தார்கள்.

பிறகு வித்துவான் திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்கள் M. A., "தமிழ்மொழி மாண்பு" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தமிழ்மொழிமிக்க பழைமையானது. இலக்கிய வளம்நிறைந்தது. வளர்ச்சியடையும் பிறமொழிகள் முன்னர் அமைக்கப்பெற்றுள்ள இலக்கண வரம்பிற்கு மாறுபட்டுத் தோன்றும். நமது மொழியில் அக்குறையைக்காண இயலாது. இயல், இசை, நாடகம் என்பவற்றை முத்தமிழ் என அழைக்கும் பண்பு, அகம், புறம் என்ற திணைப்பாகுபாடும் தமிழ் மொழிக்கே அமைந்த சிறப்பாகும் என அறிவித்தார்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முப்பொருள் உண்மையை நந்தமிழ் நன்ருக அறிவிக்கின்றது என்பதனை விளக்கி அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

1. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள்.
2. „ திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்கள்
3. „ திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்கள்.
4. „ திரு. இராகவன் அவர்கள்.
5. „ திரு. நாராயணசாமி ஐயர் அவர்கள்.
6. „ திரு. சீநிவாசன் அவர்கள்.

மேற்கண்ட ஆசிரியர்கள் அறுவறும் கடப்பாடு மேற்கொண்டு ஊக்கமுடன் பணியாற்றிவருவது பாராட்டற்குரியது. புகுமுக வகுப்பில் பன்னிருவரும், இடைநிலை வகுப்பில் இருபதின்மரும் பயிற்சி பெறுகின்றனர். மேலும் பயிற்சி பெறுதற்கு வந்துகொண்டிருக்கின்றனர்

சேக்கிழார் நினைவு நாள் திருவிழா 24—6—54 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு "கல்கி" ஆசிரியர், திரு. R. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் விழா தொடங்கப்பெற்றது. நிலையத் திருமுறை ஆசிரியர் திரு. பி. சுவாமிநாத முதலியாரவர்கள் கடவுள்வணக்கம் பாடினார்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்ருர்கள். தலைவர் தமது தலைமையுரையில் சேக்கிழார் நினைவுநாளைத் தமிழக மக்கள் ஒவ்வொரு ஊரிலும் கொண்டாடக் கடமைப்பட்டவர்கள் என்றும், சேக்கிழாரைப் பற்றி

591

வாரியாரைப் போன்றவர்கள் பேசுவது சிறந்த காரியம் என்றும் தருமபுர ஆதீனத்தார் இவ்விழாவினைச் சென்னையில் கொண்டாடுவது சிறப்புடையது என்றும் அறிவித்தார்கள். முத்தமிழ் வள்ளல் அருள்மொழியரசு கிருபானந்தவாரியாரவர்கள் 'சேக்கிழார் கவியின் மாண்பு'' என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். பெண்களுக்குப் பெருமை தருவது தமிழகத்தின் பண்பு. நாடு, நதி, பூமி, கலை இவற்றையெல்லாம் தாய்மார்களுக்கு உரியனவாகவே கண்டுள்ளது. பெரியபுராணம் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பெற்றது. அந்நூலின் பெண்ணின் பெருமையைப் பெருமையுறக்காணலாம். மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்' எனச் சேக்கிழார் அறிவிக்கிறார். அமுது அமைக்கும்முறை உண்ணும்முறை அனைத்தினையும் அழகுற அறிவிக்கின்றார். ஒவ்வொரு சொல்லிலும் உயரிய கருத்துக்களை உணர்த்துகிறார். திலகவதியார், காரைக்காலம்மையார் போன்ற பெண்மணிகளின் பெருமையைக் கவிநயங் காணுமுகத்தால் விளக்கவுரை நிகழ்த்தினார்கள். கனம் இராஜாஜி அவர்கள் எதிர்பாராத முறையில் தொடக்கு மூதல் முடிவுவரையில் இருந்து விழாவினைச் சிறப்பித்தார்கள்.

**சேக்கிழார் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சி**
25—6—54 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்குத் தொடங்கியது. திரு. K. பாலசுப்பிரமணியஐயர் அவர்கள் B.A.,B.L., அட்வகேட் தலைமைதாங்கினார்கள். தலைமையுரையில் சேக்கிழார் அருள்திறம் வாய்ந்தவர். கடவுள்நிலையை உலகியலில் இணைத்து நம்மையெல்லாம் இன்புறுத்தும் இயல்பினர். அரசியல் நெறி முறையினை ஆழ்ந்துணர்ந்தவர். இடித்துரைத்துத் திருத்தும் இயல்பினர் என அறிவித்தார்கள்.

சேக்கிழார் வரலாறுபற்றி வித்துவான், திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்கள் (தமிழ்ப்பேராசிரியர், அரசினர் கல்லூரி, சென்னை.) சொற்பொழிவாற்றினார்கள். தொண்டைவள நாட்டுக் குன்றத்தூரில் அவதரித்தார். சோழநாட்டின் முதல் அமைச்சராகத் தொண்டாற்றினார். அநபாயசோழனை அமண் சமயம் செல்லாவண்ணம் இடித்துரைத்துப் பெரியபுராணக் காப்பியம் இயற்றினார் எனத் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள். திருமதி ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார் M.A., L.T., அவர்கள் ''பெரியபுராணப் பெண்மணிகள்''


என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்துகையில் திலகவதியார் புரட்சி செய்து தம்பியைத் திருத்தினர். காரைக்காலம்மையார் புரட்சி செய்து கணவர்குக் கடவுள்நிலை காட்டினர். மங்கையர்க் கரசியார் புரட்சிசெய்து மன்னனையே மாற்றினர் எனக் குறிப்பிட்டார்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி கூறினர்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது. சேக்கிழார் வரலா றமைந்த நோட்டீஸ் கூட்டத்தினர்க்கு வழங்கப்பட்டது.

**ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுநாள் விழா 26—6—54** சனிக்கிழமை மாலை 6-30 மணிக்குத் தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுநாள் விழாக் கொண்டாடப்பெற்றது. சென்னை டிரிப்யூனல் கோர்ட் ஜட்ஜ். திரு. நடராஜ நாடார் அவர்கள் B. A., B. L., விழா விற்குத் தலைமை வகித்தார்கள். நானூறு ஆண்டுகட்கு முன் னர்த் தோன்றிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் தருமபுர ஆதீனத் தாபகராவர் என்றும் அவ்வாதீனம் தமிழுக்கும் சமயத்திற்கும் சிறந்த தொண்டுகள் செய்துவருகிறது என்றும் 27 ஆலயங்களை ஆகம முறைப்படி அழகுற நடத்திவருகிறது என்றும், அவ் வாதீன முதல்வரை நாம் நினைப்பதால் உயர்வெய்தலாமென்றும் அறிவித்தார்கள்.

"குருஞானசம்பந்தர் வரலாறு" பற்றி தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான், திரு வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். சொற்பொழிவில் இராம நாதபுரமாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீவில்லி புத்தூரில் குருஞான சம்பந்தர் தோன்றினர். கண்ணுதற் கடவுளைக் கண்ணுக்கினிய பொருளாக மதுரையம்பதியில் பொற்றாமரை தடாகத்து ஈசான்யத்தில் பெற்றார். பூசைபுரியும் முறை தெரிய திருவாரூர் கமலை ஞானப்பிரகாசரைக் கடவுளருளால் குருவாகக் கொண் டார். குரவராணைப்படி தருமபுரம் சேர்ந்தார். ஆதீனம் நிறுவினர். அடியவர் பலரை ஆக்குவித்து ஞானத்தொண்டு செய்ய நாட்டிற்கு நல்கினர் என அறிவித்தார்கள்.

"பண்டார சாத்திரம்" என்பது பற்றி பேசிய ஸ்ரீ சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பண்டாரம் என்றால் பொக் கிஷம் அல்லது களஞ்சியம், அல்லது கருவூலம் என்றும் ஞான

சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில்



**ஸ்ரீ சேக்கிழார் திருநாளவையில்**

திரு, கல்கி ஆசிரியர் தலைமையுரை நிகழ்த்துதல்.

உறை விடத்தைப் பண்டாரம் என்ற சொல்லால் பண்டைத் தமிழர் வழங்கினர் என்றும் பண்டாரம் என்ற பெயர் தரித்தோர் இயற்றியனவே பண்டார சாத்திரம் என்றும், தருமை, துறைசை யாதீனங்களில் அமர்ந்த மகாசந்நிதானங்கள் இயற்றிய வற்றைப் பண்டாரசாத்திரம் என வழங்குதல் மரபென்றும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் இயற்றிய சாத்திர நூல்கள் எட்டு என்றும், அவை தோத்திர ரூபத்திலும் சாத்திர உருவத்திலும் உள்ளன என்றும், சில பாடல் மூலம் அறிவித்து அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது.

## மாணிக்கவாசகசுவாமிகள் நினைவுநாள் விழா

4—7—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு விழாத் தொடங்கப்பெற்றது. சமயப்பிரசார நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர் கடவுள் வணக்கம் பாடினர். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். விழாவிற்கு மதுரை யாதீனம் இளவரசு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக சுவாமிகள் தலைமை தாங்கினர்கள்.

திருவாசகத் தேனை நமக்குதவிய ஸ்ரீ மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யாவரென்றும் திருவாசகமாகிய தேனைப் பருகுபவர்கட்குத் தியானநிலை கைகூடும் என்றும், இத்திருவாசகப் பாடல்களைக் கூட்டு வழிபாட்டில் அனைவரும் ஓதலாம் என்றும், ஒவ்வொரு குடும்பத்தினரும் கூட்டு வழிபாடு நடத்த வேண்டும் என்றும் ஆத்திகப் பிரசாரம் நாட்டில் நடைபெற வேண்டியது அவசியம் என்றும் சென்னையில் சமயப் பணிபுரிய தருமபுர ஆதீனம் ஒரு நிலையம் அமைத்திருப்பது மிகச் சிறந்த காரியம் என்றும் தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

''மாணிக்கவாசகர்'' வரலாறுபற்றிக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்கள் பேசினர்கள். பேசுகையில் அமைச்சர் பதவியில் இருந்தவர் மாணிக்கவாசகர், திருவாதவூரில் அவதரித்தவர். பதவியில் இன்பங்காணவில்லை. குருந்தமரத்தடியில் குளிர்ந்த இன்பங்கண்டார். கண்ட இன்பத்தை வாசகத்தால் வெளியிட்டார் என விளக்கியுரைத்தார்கள். ''திருவாசகத் தேன்'' என்பதுபற்றிப் பேசிய திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள் (திருவாவடுதுறை யாதீன வித்துவான்) பேசுகையில் உலகில் காணப்படுந்தேனை அளவோடு உபயோகித்தால் உடல் வளம் பெறலாம் என்றும் இத்திருவாசகத் தேனை எப்பொழுதும் பருகலாம் என்றும் இத்தேன் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் என்றும் அறிவித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

594

# மதிப்புரை

## திருவிடைக்கழித் திருவிசைப்பா - கந்தர்கலிவெண்பா

இது, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆணையின் வண்ணம் ஸ்ரீகாசிமடத்து இளவரசர், வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப் பெற்ற நூல். இரண்டும் முருகக் கடவுளை வழிபடுவார்க்குச் சிறப்பின் உரிய தோத்திரங்கள். இது ஜய ஆனி - 28-இல் நடந்த திருவிடைக்கழித் திருக்கோயிலின் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகத்தில் வழங்காநின்றது. இது வழக்கம்போல நல்ல அழகிய சிறந்த பதிப்பாகத் திகழ்கின்றது.

## திருக்குறள் - பரிமேலழகருரை

சென்னை - மயிலாப்பூர், திருவள்ளுவர் கோயில் திருக்குறள் அறநிலயத்தின் நான்காவது வெளியீடாகும். இப்புதிய பதிப்பு திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ரூபாய் 35000 மூலநிதிவைத்து, ஆண்டுதோறும் ரூபாய் 1050—0—0 அளித் தருள்கின்றார்கள். இவ்வாண்டில் அருளப்பெற்ற அத்தொகையின் வந்த கலைமகள் வடிவம் இத்திருக்குறளுரை. இது சிறந்த பதிப்பு என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். முதற் குறளுரை விசேடத்தில் 'உலகு என உலகின் மேல் வைத்துக் கூறினார்'' என்பதும் நான்காவது குறளில், 'வேண்டாமை இல்லான்' என்று காட்டியதும் அறிஞர்க்குப் பெருமகிழ்ச்சி விளைக்கும். இவைமுதலிய பல திருத்தங்கள் இதில் காணப் படுகின்றன. இவ்வெளியீட்டிற்கு மணலி, லக்ஷ்மணசாமி முதலியார், எண்டோமெண்டு பரம்பரை டிரஸ்டி, திருவாளர் சீனிவாச முதலியார் B. A. அவர்களுதவிய 1000 ரூபாயும் பயன் பட்டுள்ளது என்று தெரிகிறது.

## தமிழிலக்கியம்

இப்பெயர் சூடிய நூலொன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடாய் வந்துளது. அதில் உள்ளவை

சொற்பொழிவுகள். அவற்றைப் பொழிந்தவர்கள் சென்னை முன்னாள்மேயர் திருவாளர். சு. இராமசாமி நாயடு அவர்கள். அவர்களைச் சொற்பொழிவாளராக மட்டும் அறிஞர்கொள்ளார். அச்சொல் கருவியாகப் பொருளைப் பொழிவார். நிதானமாக அன்று; மிக வேகமாக. சாதாரண நடையிலன்று; உயரிய தமிழ்நடையில். பேசுவது மட்டும் அன்று; எழுதுவதும் அவ்வுயரிய தூய தமிழ்நடையிலே. அது புலவர்கட்கு மட்டுமோ விளங்கும்? எல்லோருக்கும் விளங்கும். முப்பத்து நான்கு ஆண்டுகளாகப் பள்ளிக்கூடத்தில் கற்பித்த அநுபவம் எனக்கு உண்டு. திரு. நாயடவர்கள் வெளிநாடுகளிற் சென்று மீண்ட பின் எல்லாம் எழுதி உலகிற்கு உதவிய சில (தமிழ்) நூல்களைப்போல எளிய - இனிய - தூய தமிழ் உரைநடைப்பனுவலை நான் பார்த்ததில்லை. அப்படி ஒன்று உண்டோ என்ற ஐயம் பலர்க்குத் தோன்றியிருக்கலாம். அதை மெய்ப்பிக்க, இப்புதிய வெளியீடும் சிறந்த கருவியாய் விளங்குகிறது.

சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் அவற்றின் இடைக்காலத்திலும் தோன்றிய தமிழிலக்கியம் பலவற்றையும் பற்றிய சிறந்த பல உண்மைகள் இந்நூலில் உணர்த்தப்பட்டுள்ளன. இலக்கிய இலக்கணங்கள் தோன்றுந் தாயகமாக இலங்கும் மடாலயங்கள் உலகிற்கு உபகரித்தருளிய - அருளும் நூல்களையும் முறை வழாது தெரிவித்துள்ளார் இந்நூலாசிரியர். பண்டைய - இன்றைய பல்வகைப் புலவர்களையும் காலக்கிரமத்தில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கது. இப்புதிய நூல் தமிழிலக்கியத்தின் பழைய புதிய பலபல உண்மைகளைப் பொதுவில் உணர்த்தும் பெறலரும்பனுவல் என்பது இதனைப் படிப்பவர்க்கு நன்கு விளங்கும். வரலாற்று நூல்கள் மிக எழுதப்படவேண்டுமென்னும் இக்காலத்தில், இது பலராலும் விருப்பொடு வாங்கிப் போற்றவும் பலமுறை பதிக்கவும் பெறும் என்று தோன்றுகிறது. இக்காலத்துத் தமிழ்மாணக்கர்களுக்கு இந்நூல் தமிழிலக்கியங்களைப் பற்றிய பொதுவுணர்வை இனிது தோற்றும், ஆதலின், அவர்கள் இதனை வாங்கிக்கற்பது மிக நன்று. இஃது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கிடைக்கும்.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

## True Extracts from the Visitors' Book of

# Sri Panchanathiswaraswamy Temple,

## Thiruvaiyaru.

Religion is art turned inward. Art is religion turned outward. The Truth of this statement was never brought home better to us than today, when we offered worship at the temple here. India is a land of temples and worship and it is our prayer that millions of our countrymen and country women would continue to have faith in temples and worship. All those who are responsible for keeping the shrine in such clean and orderly fashion deserve our thanks. We all had a peculiar sense of spiritual upliftment when prayers were offered on our behalf at the Panchanathiswara shrine.

(Sd.) E. N. SUBRAMANIAM, M.A., B.L.
B. T. College, Madanapalli.

(Sd.) E. H. PARAMESWARAN, M. L. C.

(Sd.) N. M. SUNDARAM,
Headmaster, Tilak Vidyalaya
Kallidaikurichi.

I had the pleasure and honour of worshipping this great temple which is very well maintained.

(Sd.) S. SIVARAMAN,
Chief Inspector of Factories,
Madras.

I had the fortune of visiting the holy place and the temple of Panchanathiswara in company with the Income-tax Officer of Tanjore and the members of my staff this evening just at the auspicious moment when the worship of the Lord began on the 'Prodosha' day. We are very much impressed at the way the worship was conducted and the neat and tidy atmosphere. The credit goes to the managing body of this sacred institution no doubt.

(Sd.) J. DAS,
13—6—54.
Asst. Commissioner of Income-tax,
Madras.

## Gurugnanasambandar Higher Ely. School, Dharmapuram.

I have visited Dharmapuram Gurugnanasambandar Higher Elementary School and was delighted to see that the working of the school is exeedingly good. Both the Head-master and his assistants are evincing great interest in the welfare of the institution. The unificance of His Holiness conducting a free school of this kind deserves admiration and respect at the hands of every one. I wish the school great prosperity and popularity.

(Sd.) P. GOVINDA MENON,
Judge, High Court.
2—7—54.

## Oriental College, Dharmapuram.

In these days where atheism seem to show its ugly head, institutions like the Dharmapuram

598



Adhinam, are doing immense service to the cause of Hindu culture and religion whose revival is absolutely essential for the well being of the country. I am glad that prominence is given to the study of both Tamil and Sanskrit. I wish the college all success and prosperity.

(Sd.) P. GOVINDA MENON,
Judge, High Court.
2—7—54.

## Oriental Middle School, Dharmapuram.

The Oriental Middle School run under the auspices of the Dharmapuram Adhinam is a very useful institution catering to the needs of a large body of people of the locality. Here the students are educated on proper lines and the foundation well and truly laid will serve to make them good citizens of the country. I wish it all success.

(Sd.) P. GOVINDA MENON,
Judge, High Court.
2—7—54.

## Music College, Dharmapuram.

The Music School recently started by the Adhinam, would I am sure is produce good musicians and artistes who will proficient in devotional songs. I wish it prospects and good future.

(Sd.) P. GOVINDA MENON,
Judge, High Court.
2—7—54.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ முத்து சோதிடர், திருவிடைமருதூர்

(ஜய-ஷூ ஆடி-மீ 1-உ முதல் 32-உ முடிய)

(16—7—54 முதல் 16—8—54 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் மிசிர பலனையே தரும். சுபம் அசுபம் கலந்து நடக்கும். வியாதியால் அதிக சிரமத்தையும் வீண் நஷ்டங்களையும் உண்டுபண்ணும் மனக்கவலையும் எதிர்பாராத பல சிக்கலான காரியங்களும் உண்டாகும் தொழில் ஓங்காது. குடும்ப கலஹம் சிப்பந்தி கலஹம், ஆசாசரபாதை முதலிய அசுபமான பலனேகாட்டும். சனி வியாழன் நலன் தரும்,

**2. விருஷபம்:** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

விருஷபராசி பூரா பாதங்களும் சென்ற மாதம்போலவே நடக்கும். விசேஷமாக வியாதியாலும் விவஹாரத்தாலும் அதிக செலவுகள் ஏற்படும். குடும்பத் தொல்லைகளும் வேலையாட்கள் தொல்லைகளும் அதிகமாகும். விவசாயிகள் மிராசுதார்கள் கவலைப்படுவார்கள், வியாபாரிகள் நஷ்டமடைவார்கள். உத்யோகஸ்தர்கள் இடம் மாறுவார்கள். புதன் வியாழன் சுபவாரமாகும்.

**3. மிதுனம்:** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிதுனராசி பூரா ஒன்பது பாதங்களும் சுபமிராது. திருவாதிரை நான்கு பாதங்களும் அதிக உழைப்பின்பேரில் நலன்காட்டும். புனர்பூசம் மூன்று பாதங்களும் மிகுந்த துக்க

பலனை பலவிதத்திலும் தரும். தெய்வபலமே இராது, காம குரோதாதிகள் ஓங்கும். சனி செவ்வாய் வியாழன் அசுபமாகும்.

**4. கடகம்:** புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்,

ஆயில்யத்துக்கு மாத்திரம் நான்கு பாதங்களும் சுபம்தரும். ராஜாங்கத்தால் நன்மை உண்டாகும் விவசாயம் ஓங்கும். தொழில் விருத்தியாகும் சுபசந்தோஷம் ஏற்படும். மற்ற இரு நக்ஷத்திரபலனும் எல்லாபாதங்களும் சுபமிராது. வியாதி பீடை. அதிகச்செலவு அபஜயம் மேலோர் விரோதம் பூர்வீக தன நஷ்டம் குருஜன துரோகம் சத்துருபாதை அடிக்கடி சஞ்சார பலன் இவைகள் ஏற்படும், புதனும் சனியும் சுபமாகும்.

**5. ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி பூராவும் ஒன்பது பாதங்களும் சந்தோஷத்தை தரும். வித்யா விருத்தியாகுதல் நூதன உத்யோக பிராப்தி. தொழில் மேன்மை வியாபார ஏற்றம் நஷ்டதனவரத்து பந்து மித்திராளுடைய சேர்க்கை தூரயாத்திரைக்கு சந்நத்தமாகுதல் அன்னிய தேசத்திலிருந்து சுபசமாசாரக் கேள்வி முதலிய சுபங்கள் நடைபெறும். வெள்ளியும் சனியும் சுபமாகும்.

**6. கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் மூன்று பாதங்களும் குடும்ப சந்தோஷம் உத்யோகலாபம் கீர்த்திபத்திரம் கிடைத்தல் ஆரோக்கியம் உண்டாக்குதல் சம்மித்திர பிராப்தி இவைகளைத் தரும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் அதிக சிரமமான வேலைகளை உண்டுபண்ணி கவலையை உண்டுபண்ணும் விவசாயம் ஓங்கும். காலிகன்று வாஹனவிருத்தி ஏற்படும். வியாபாரிகளுக்கு முற்பாதி லாபமும் பிற்பாதி நஷ்டமும் உண்டுபண்ணும் ராஜாங்க பிரீதி உண்டாகும். அபூர்வவஸ்து தரிசனமும் அன்னிய தேசத்திலிருந்து அழைப்பும் எங்கும் கீர்த்தியும் உண்டாகும். பிரபுக்களுக்கு பீடையும் மனக்கொதிப்பும்

ஏற்படும். சித்திரை இரண்டு பாதங்களும் ஏழைகளுக்கு மிகுந்த லாபம் தரும். உத்யோகம் ஓங்கும். விவஹாரம் வெற்றியடையும் ஆரோக்கிய முண்டாகும். சத்துரு சரண் அடைவன் இல்லறசுகம் ஓங்கும். புதன் வெள்ளி நலன்தரும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

விசாகம் மூன்று பாதங்களும் சென்ற மாதம்போலவே இருக்கும். நன்மை இராது. வியாபாரிகளுக்கு நஷ்டமே ஏற்படும் காலிகன்று குறையும் உத்யோக பங்கமும் உண்டாகும். சுவாதி பூராவும் சித்திரை பின்னரையும் சுபசந்தோஷ விருத்தி நஷ்ட தனபிராப்தி, வியாதிசாந்தி, தொழில் மேன்மை தெய்வபலம் பிரகாசம் சஞ்சாரபலன் யஞ்ஞாதி சத்கர்மபலன் இவைகள் ஏற்படும். சனி செவ்வாய் சுபம்தரும்.

8 **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

அனுஷம் நான்கு பாதங்கள் சுபமிராது. மற்ற இருநக்ஷத்திர பாதங்களும் சுபமாக நடக்கும். அடிக்கடி சஞ்சாரத்தில் லாப கரம் ஏற்படல், நூதன உத்யோக பிராப்தியில் இடம் மாறல். பெரியோரால் உபகாரத்தன்மை இல்லறசுகம். தேவி அனுக்கிரஹம் கிடைத்தல் நூதன வஸ்திராபரணச் சேர்க்கை. பூலாபம் கட்டடவேலைகள் முதலிய சுபங்கள் ஏற்படும். சனி செவ்வாய் புதன் சுபவாரமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும் சிரமம் காட்டும். ஆனால் சிற்சில சுபசந்தோஷத்தால் சிரமம் மாறும். பூராடம் நான்கு பாதங்களும் அதிகத் தொல்லைகொடுக்கும். வீண் செலவுகளும் விவசாயத்தில் பல சிக்கல்களும் துஷ்டஜன சேர்க்கையும் அதனால் தெய்வபலம் குறைதலும் ஏற்படும். உத்திராடம் முதல்பாத பலன் சந்தோஷமுண்டுபண்ணும். வாஹனபிராப்தி, வஸ்திராபரணச் சேர்க்கை, தொழில் மேன்மை நஷ்டம், தானக சேருதல் முதலிய சுபங்களை கொடுத்துவரும் புதனும் வெள்ளியும் சுபவாரமாகும்.

602



**10. மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

மகரம் சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களின் பலனும் சந்தோஷமாய் நடக்கும். தனலாபம் பெரியோர் அன்புகிட்டுதல் கீர்த்திபத்திரம் கிடைத்தல். உத்யோக மேன்மை, சத்துரு பராஜயமடைதல் ஆரோக்கியமுண்டாகுதல் மாதுரு பிதுரு சுகம் இல்லறசுகம் கிட்டுதல் முதலிய சுபங்களாகவே நடக்கும். குருவாரமும் புதவாரமும் சுபமாகும்.

**11, கும்பம்:** அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

பூரட்டாதி மூன்று பாதங்களும் சுபத்தையேதரும், வியாதி சாந்தியாகும் சத்துருநாசம் ஏற்படும் நஷ்டதனம் கிடைக்கும். அந்நிய ஸ்தல சுகவாசமுண்டாகும் தொழில் ஓங்கும். அவிட்டம் பின்னறையும் சதயம் நாலுபாதமும் கஷ்டபலனையே உண்டு பண்ணும். மனம் நிம்மதி இராது. சதா தொல்லையாகவே இருக்கும். எதுவும் விசனமடையும் சனி செவ்வாய் கெடுதல் உண்டுபண்ணும். புதன் சுபவாரமாகும்.

**12. மீனம்:** பூரட்டாதி $\frac{1}{4}$. உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசிபலன் பூரட்டாதி நான்காம் பாதம் கஷ்ட பலனையும் மற்ற இரண்டும் மிசிரமாயும் நடப்பதில் மாதம் முற்பாதியில் சுகம்தரும். உத்யோக லாபம் கிடைக்கும். பெரியோர் அன்புகிட்டும். கஷ்ட நிவர்த்தியாகும். பெரியோர் ஆசிகிடைக்கும். தெய்வபலம் ஓங்கும். வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

குறிப்பு:- ஷி ஆடிமாதம் முதல் தக்ஷிணாயனம் முடிய பிரபஞ்ச வர்த்தமானத்தால் பல மாறுதல்களும் இயற்கைக் கோளாறுகளும் ஏற்பட்டு உலகில் அநேகவிதமான அற்புத பலன்களைக் காட்டுமாதலால் அங்காங்கு ஆஸ்தீக சஜ்ஜனங்கள் தெய்வ வழிபாடுகளையும் யஞ்ஞங்களையும் நடத்திக்கொண்டுவர உலகம் சுபீக்ஷமடையும் சாந்தி ஏற்படும். சுபம்.

உ

குருபாதம்

பண்ணிசைப் பதிவுத்தட்டுப்

# பாராயணத் திருமுறைப் பாடல்கள்

---

வெளியீடு; தருமபுர ஆதீனம்.

பாடியவர் :

ஆதீன இசைப்புலவர், இசையரசு,

**திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள்**

தயாரிப்பு:

**The Gramaphone Company Ltd., Madras.**

---

இப்பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகள், பத்து அடங்கியது.

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40-10—0 |
| பாக்கிங் செலவு | ரூ. | 2—0—0 |
| போஸ்டுமூலம் அனுப்ப தபாற்செலவு | ரூ. | 4—8—0 |

வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிடைக்குமிடம் :—

காஷியர்,

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

தஞ்சை ஜில்லா.

தருமபுர ஆதீன வெளியீடு

# திருக்குறள் - உரைவளம்

## II பொருட்பால் III காமத்துப்பால்

உரைப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, முதுமொழி வெண்பாக்கள் ஆகிய ஐந்து பிரிவுகளில உரைவளம் தொகுக்கப்பெற்றுள்ளது. ஆசிரியர் குறிப்பும் தரப்பட்டுள்ளது.

காமத்துப்பாலில் தொகுப்பாசிரியர் வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்களால் ஐம்பத்தொரு தலைப்புகளில் ஓர் அரியபெரிய நூல் ஆராய்ச்சியும் எழுதப் பெற்றுள்ளது. *M. O.* மூலம் பணம் அனுப்பிப் பெற வேண்டும்.

### பொருட்பால் விலை விபரம்

கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள்.

| | |
|---|---|
| காலிகோ பைண்டு | ரூ. 13—8—0 |
| தபாற்செலவு வகையரு | 2—0—0 |

### காமத்துப்பால் விலை விபரம்

கிரௌன் 1×4 சைஸ் 536 பக்கங்கள்

| | |
|---|---|
| காலிகோ பைண்டு | ரூ. 6—0—0 |
| தபாற்செலவு வகையரு | 1—8—0 |

கிடைக்குமிடம்:—

மானேஜர்,<br>தருமபுர ஆதீனம்,<br>தருமபுரம், மாயூரம் *P. O.*<br>தஞ்சாவூர் ஜில்லா.


Printed & Published by K Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—7—1954.